# இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி இலங்கைக்கான ஓர் அமைப்பு

## கேள்வி பதில்கள்

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

# இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி
# இலங்கைக்கான ஓர் அமைப்பு

## கேள்வி பதில்கள்

**வெளியீடு:**

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு - 09
தொலைபேசி: 0112687091
பெக்ஸ்: 0112686030
**E-Mail: secretariatslji@gmail.com**

## முன்னுரை

4/21 தாக்குதலின் பின் பொதுவாக முஸ்லிம் சமூகம் பற்றியும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் பல்வேறு தரப்பினர் பற்றியும் பல்வேறு சந்தேகங்கள் முன்வைக்கப்படும் ஒரு சூழல் தோற்றம் பெற்றிருக்கின்றது. தவிர்க்க முடியாத இந்த சூழலை 'உண்மையைக் கண்டறிதல்' என்ற கோணத்தில் அணுகுவதே சிறந்தது.

மறைந்திருக்கும் உண்மைகள், சந்தேகங்களாகப் பார்க்கப்படலாம் என்பதை ஏற்றுக்கொண்டு, உண்மைகளை உள்ளவாறு வெளிக்கொணர்வதற்கு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதே பயனளிப்பதாக இருக்கும். அதாவது, ஒவ்வொரு சாராரும் தங்களிடமுள்ள உண்மைகளையே வெளிக்கொணர வேண்டும்; பிறரிடமுள்ளவற்றை தமது கண்ணாடிகள் மூலமாகவல்ல...

இந்த வகையில், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி பற்றி எழுப்பப்பட்ட சந்தேகங்கள் மற்றும் அவற்றிற்கான பதில்களை கேள்வி–பதில் அமைப்பில் தொகுத்து வெளியிடுகின்றோம்.

ஜமாஅத்தே இஸ்லாமி என்ன செய்கிறது; அதனை வழிநடத்தும் கோட்பாடுகள் எவை; அதன் நோக்கங்கள், வழிமுறைகள் எத்தகையவை என்பவற்றிலிருந்து துவங்கி, தற்போதைய சூழலில் அந்த அமைப்பு தொடர்பாக எழுப்பப்படுகின்ற சந்தேகங்களுக்கான பதில்கள் வரை பல்வேறு உண்மைகளைத் தெளிவுபடுத்தும் விதமாக இந்தச் சிறிய கையேடு உங்களது கரங்களை வந்தடைந்திருக்கின்றது.

இதிலுள்ள கேள்விகள் மற்றும் பதில்கள் ஒன்றோடொன்று தொடர்புள்ளவைகளாக இருப்பதனால் இடையிடையே வாசிப்பதை விட தொடராக வாசிப்பது பயனுள்ளதாக இருக்கும் என்ற ஆலோசனையையும் முன்வைக்கிறோம்.

இதற்குப் பின்னரும் சந்தேகங்கள் எழுமாயின், எம்மைத் தொடர்பு கொள்வதற்கும் கேட்பதற்கும் வாசகர்கள் பின்வரும் முகவரிக்கு எழுதலாம்.

**பொதுச் செயலாளர்**
**இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி**
**77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை,**
**கொழும்பு -9**

## கேள்வி- 1

### 4/21 பயங்கரவாதத் தாக்குதல் பற்றி இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் நிலைப்பாடு என்ன?

**பதில் :** *அந்தத் தாக்குதலால் ஏற்பட்ட அதிர்ச்சியில் இருந்து நாங்கள் இன்னும் மீளவில்லை. காரணம், எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் அது மிலேச்சத்தனத்தின் அதி உச்சமாக இருக் கிறது. நூற்றுக்கு இருநூறு வீதம் அது அக்கிரமமானது என்பதில் ஐயமில்லை. மனிதப் பெறுமானங்கள் அனைத்தையும் ஒட்டு மொத்தமாகப் புதைத்துவிட்ட கோர நிகழ்வு அது... பயங்கர வாதிகளின் அறிவுக் கண்களை குருடாக்கி, மாபாதகம் ஒன்றின் சூத்திரதாரிகளாக அவர்களை மாற்றிவிட்ட வடிகட்டிய முட்டாள்த்தனமாகவும் அது இருக்கின்றது.*

*குறித்த தாக்குதலை நடத்தியவர்கள்... மற்றும் அதற்குத் திட்டமிட்ட சூத்திரதாரிகள் மனிதர்கள் என்றே கூறத் தகுதியற்றவர்கள். எந்தக் குற்றமுமற்ற அப்பாவி மக்களை மார்க்கத்தின் பெயரால் வெறி கொண்டு பலியெடுத்தவர்கள் அவர்கள்.*

அவர்களது அந்த வெறிச் செயலுக்கும் இஸ்லாத்துக்கும்... அதேபோன்று அந்த வெறிச் செயலுக்கும் இலங்கை முஸ்லிம் களின் மனோபாவத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

அதனால்தான் அப்பயங்கரவாதிகளைக் கைது செய்யும் விடயத்தில் முஸ்லிம் சமூகம் தன்னாலான அனைத்து ஒத் தாசைகளையும் இலங்கை அரசுக்கு வழங்கியது. ஒரு தாய் தனது சொந்த மகளை பொலிஸாரிடம் ஒப்படைக்கும் அளவு முஸ்லிம் சமூகம் இந்தப் பயங்கரவாதத்தை நிராகரித் திருக்கிறது. தற்கொலைக் குண்டுதாரிகளின் பிரேதங்களை அடக்கம் செய்ய மறுத்துவிட்டது முஸ்லிம் சமூகம்.

அதேநேரம், 4/21 பயங்கரவாதத் தாக்குதலால் ஏற்பட்ட மற்றோர் அதிர்ச்சியையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். குறித்த பயங்கரவாதத் தாக்குதலும் அதனால் ஏற்பட்ட பேரழிவுகளும் நிறுத்தப்பட முடியுமாக இருந்த போதிலும் பொறுப்பு வாய்ந்தவர்களால் தடுத்து நிறுத்த முடியாது போனது ஏன் என்ற அதிர்ச்சியே அது. அந்த அதிர்ச்சியும் எம்மைவிட்டு இன்னும் நீங்கவில்லை.

## கேள்வி- 2

**மார்க்கத்தின் பெயரால் நடந்த தாக்குதல் என்று குறிப்பிட்டீர்கள். மார்க்கத்தின் பெயரால் அல்ல; மார்க்கம்தான் இந்த வெறிச் செயலுக்குக் காரணம் என்ற அபிப்பிராயமே இன்று பரவலாகக் காணப்படுகின்றது. உங்களது பதில் என்ன?**

**பதில்:** ஆயிரம் வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் இருக்கின்ற மார்க்கம் பற்றியே நாம் பேசுகின்றோம். பயங்கரவாதிகளின் முகாம்களுக்குள் காதோடு காது வைத்து இரகசியம் பேசி உருவாக்கப்பட்ட மார்க்கம் பற்றி நாம் பேசவில்லை. ஆயிரம்

வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் இருந்த இஸ்லாம் கருணைமிக்கதாக இருந்தது. பயங்கரவாதிகளின் முகாம்கள் உருவாக்கிய இஸ்லாம் வெறி கொண்டதாக இருக்கிறது.

ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியிலும் அந்த மதத்தின் பெயரால் இத்தகைய பயங்கரவாதிகள் உருவா கின்றார்கள். அவர்களுக்கும் அந்த மதத்துக்கும் எந்த சம்பந்தமும் இருப்பதில்லையே!

## கேள்வி- 3

**முஸ்லிம்களிடம் மார்க்கப்பற்று அதிகம்; தேசப்பற்று குறைவு என்ற ஒரு பார்வையும் இருக்கிறது. இது குறித்த உங்களது கருத்து என்ன?**

**பதில்:** உள்நாட்டு யுத்தம் நடந்த முப்பது வருட காலங்கள்... சுதந்திரப் போராட்டம் நடந்த காலங்கள்... சிங்கள மன்னர்களின் காலங்கள் என எக்காலப்பகுதியை எடுத்துக் கொண்டாலும் அக்காலங்களில் முஸ்லிம்கள் சிங்கள சமூகத்தோடும் தமது தாய் நாட்டோடும் நெருக்கமாகத்தான் வாழ்ந்திருக்கிறார்கள். இன்றும் கூட பல்வேறு வழிகளில் தாய்நாட்டுக்கு பங்களிப்புச் செய்கின்றவர்களாகவே அவர்கள் இருக்கின்றார்கள்.

அதேபோன்று, வடகிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமிழ் மக்களோடு இணக்கமாக வாழ்ந்திருக்கிறார்கள். “பிட்டும் தேங்காய்ப்பூவும் போல” என்று தமிழ் மக்களே அதனை சிலாகித்தும் பேசுகிறார்கள்.

அது மட்டுமல்ல, மார்க்கப்பற்று, தேசப்பற்று மற்றும் மனித நேயம் என்பன ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை; அவற்றை தனித்தனியாகப் பிரிக்க முடியாது என்பதை வலியுறுத்திக் கூற வேண்டும் என்று நினைக்கிறோம்.

நாட்டில் வரட்சி ஏற்பட்டால் மழை வேண்டி தொழுகை நடத்துவது ஓர் இஸ்லாமிய மரபு. இங்கு மார்க்கமும் தேசமும் பிரிக்க முடியாத அம்சங்களாகி ஒன்றிணைவதைப் பார்க்கிறோம். ஆக்கிரமிப்புப் படையொன்று நாட்டில் நுழைந் தால் அந்தப் படைக்கு எதிராக அந்நாட்டில் வாழ்கின்ற எல்லா மக்களைப் போலவே முஸ்லிம்களும் போராட வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது. இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்த முஸ்லிம்கள் அதனை உணர்ந்திருந்தார்கள். மனிதர்கள் அனைவரையும் ஒரு தாய் மக்களாகப் பார்க்கின்றது இஸ்லாம். எனவே, மனிதநேயத்தை யும் மார்க்கத்தையும் இரண்டாகப் பிரிக்க முடியாது.

இவ்வாறெல்லாம் இருந்தும்கூட, முஸ்லிம்கள் தேசப் பற்று இல்லாதவர்கள், மனிதநேயம் அற்றவர்கள் என்றதொரு பிரமையை வளர்ப்பதற்கு ஒரு சாரார் மோசமான வழிமுறை களைக் கையாண்டு முயற்சித்து வருகிறார்கள்.

ஸ்திரமற்ற அரசியல், பொருளாதார நெருக்கடி, ஊழல்கள் மலிந்த நிர்வாகம், உள்நாட்டு யுத்தம், குற்றச் செயல்களின் அதிகரிப்பு, யாப்பு அனர்த்தம், போதைவஸ்து வியாபாரம் என சுதந்திரமடைந்த காலம் முதல் பல்வேறு பிரச்சினைகளுக்கு நாடு முகம் கொடுத்து வருகிறது; இன்றும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்பது அனைவரும் அறிந்ததே. மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளின் தரத்துக்கு வர முடியுமாக இருந்த எமது நாட்டை தற்போதைய நிலைக்கு கொண்டு வந்த தேசத் தலைவர்கள் முஸ்லிம்களல்லர். முஸ்லிம் களில் சில சில்லறைகள் இந்த சீர்கேடுகளுக்கு துணையாக இருந்திருக்கலாம். ஆனால், இந்நாட்டின் மொத்தப் பிரச்சினை யாக இன்று முஸ்லிம்கள் சித்தரிக்கப்படுகிறார்கள்.

இலங்கை முஸ்லிம்கள், இலங்கையில் பிறந்ததற்காக பெரு மைப்படுகிறார்கள் என்பதை மிக உறுதியாகக் கூற வேண்டும். இன்றும் முஸ்லிம்கள் தமது அன்றாட கலந்துரையாடல் களில் அதனை சர்வசாதாரணமாகப் பேசுகின்றார்கள்.

*சாதாரண மக்களின் கதைகளில் இலங்கை பற்றிய அவர்களது எண்ணங்கள் இவ்வாறு பிரதிபலிக்கின்றன:*

*எண்திசையிலும் கடல்... மத்தியில் மலை நாடு... அங்கிருந்து நாற்திசையிலும் வழிந்தோடும் நதிகள்... பார்க்கும் பக்க மெல்லாம் பசுமை... சீரான கால நிலை... அதிக வெப்பமும் அதிகக் குளிருமில்லாத பருவகாலங்கள்... வருடம் முழுவதிலும் நாடு முழுவதிலும் மழை வீழ்ச்சி... பருவகால ஆடைகளின் அவசியமின்றி வாழும் வசதி... எண்ணற்ற இயற்கை வளங்கள்... இரவுகளோ பகல்களோ மிக நீண்டதாக இல்லாத நேர வலயம்... என்று எத்தனை சௌபாக்கியங்கள்!!! இலங்கை ஒர் அற்புதமான நாடு என்று பேசாதவர்கள் குறைவு என்றே கூற வேண்டும். அத்துடன் படித்தவர்களின் எண்ணங்களில் பிரதி பலிக்கும் இலங்கை இதனைவிட உயர்ந்ததாக இருக்கிறது.*

*நீண்ட வரலாற்றையும் சிறந்த பாரம்பரியங்களையும் கொண்ட தொரு நாடு இலங்கை... தனக்கேயுரிய கலை, கலாசார சிறப்பம் சங்களும் அதற்கிருக்கின்றன... அத்துடன் ஜனநாயக மரபுகளுக்கு நீண்ட காலமாகப் பழக்கப்பட்ட மக்கள்... உலகின் பிரதான சமூகங்கள் நான்கினது (பௌத்தம், ஹிந்து, இஸ்லாம், கிறிஸ்தவம்) கூட்டுச்சேர்க்கை... பூகோள வரைபடத்தில் கேந்திர முக்கியத்துவமான இடம்... விவசாயம், வேளாண்மை, பண்ணை வளர்ப்பு, மீன்பிடி, நெசவு என இயற்கை வளங்களோடு இணைந்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகள்... இவற்றோடு சூழல் பாதுகாப்பு மற்றும் வளப் பயன்பாடு என்பவற்றை அதிகபட்சம் கருத்தில் கொண்டு நாட்டுக்கு இன்றியமையாத அபிவிருத்திப் பணிகளைத் திட்ட மிட்டுச் செய்ய முடியுமானால் ஆசியாவின் அதிசயமாகவன்றி இலங்கை உலக அதிசயமாகவே மாறலாம்.*

*பாமரர்களும் படித்தவர்களும் இவ்வாறு அதிசயமாகப் பார்க்கின்றதொரு நாடுதான் இலங்கை.*

*மேலும் முஸ்லிம்கள் அடுத்த சமூகத்தவர்களோடு சினேகமா -கவும் ஒத்துழைப்புடனும் தான் வாழ்கின்றார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது.*

## கேள்வி- 4

**முஸ்லிம்கள் எந்தத் தவறும் செய்யாதவர்கள் என்று கூறுகின்றீர்களா? அவர்களால் எந்தப் பிரச்சினையும் இந்த நாட்டுக்கோ ஏனைய சமூகங்களுக்கோ இல்லை என்பது உங்களது வாதமா?**

**பதில்:** *அனைவரையும் போல முஸ்லிம்களும் மனிதர்களே. மனிதர் களின் இயல்பில் இருக்கும் தவறுகளுக்கு அவர்கள் ஆளாக மாட்டார்கள் என்று நாம் அவர்களைத் தூய்மைப்படுத்த வில்லை. எனினும், நாட்டின் இறைமைக்கோ அதன் பாதுகாப் பிற்கோ அதன் அபிவிருத்திகளுக்கோ மொத்த சமூகமும் ஒன்று சேர்ந்து திட்டமிட்டு அச்சுறுத்தல் விடுத்ததா என்றால்... இல்லை, இல்லவே இல்லை என்றுதான் கூற வேண்டும்.*

*அது தவிர, இனவாதத் தவறுகள், மதவாதத் தவறுகள், அரசியல் தவறுகள், தனிப்பட்டவர்களின் தவறுகள் எனத் தவறுகள் நடந்து கொண்டுதானிருக்கின்றன. அத்தகைய தவறுகள் முஸ்லிம் சமூகத்தில் மட்டுமன்றி அனைத்து சமூகங்களிலும் இடம்பெறுகின்றன. அவற்றுள் முடியுமானவற்றை சட்டங் களாலும் ஏனையவற்றைப் பேச்சுவார்த்தைகள் ஊடாகவும் தீர்க்க வேண்டும். ஒரு சமூகத்தில் இருக்கின்ற தவறுகளை மற்றொரு சமூகம் வீதிக்கிறங்கித் தீர்க்க முற்படுவது உலகம் அங்கீகரித்ததொரு மரபல்ல. அவ்வாறு செய்வது தான் சிறந்த வழிமுறை என்றால், அரசாங்கம் எதற்கு? அரசாங்கத்தின் வேலை என்ன? மக்களின் பிரச்சினைகளை மக்களின் கைகளில் கொடுத்து விட்டு நாட்டைத் தத்தளிக்க வைப்பதாயின் அரசாங்கம் ஒன்றை மக்கள் ஏன் தெரிவு செய்கின்றார்கள்?*

## கேள்வி- 5

**எவ்வாறாயினும், 4/21 தாக்குதலின் பின்னர் இலங்கை முஸ்லிம் சமூகம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகிறது என்பதே உண்மை. அவற்றுள் ஒன்றுதான் முஸ்லிம் சிவில் அமைப்புகள், குறிப்பாக இஸ்லாமிய இயக்கங்கள் இக்கால கட்டத்தில் பல்வேறு விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, அவ்வமைப்புகளுக்கும் தீவிரவாதத்திற்கும் தொடர்பு உண்டா என்று அவதானிக்கப்படுகின்றது. இந்நிலையில் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

**பதில் :** *சுருக்கமாக ஒரே வார்த்தையில் கூறுவதாயின், "கோட்பாடு, நடைமுறை ஆகிய இரண்டிலும் இஸ்லாத்தின் உன்னதமான போதனைகளைப் பின்பற்றி... தனிப்பட்ட, குடும்ப, சமூக, தேச விவகாரங்கள் அனைத்திலும் முன்மாதிரிமிக்க இலங்கையர் களாக முஸ்லிம்கள் செயல்பட வேண்டும் என்கின்ற சிந்தனை யுடன் செயல்படுகின்ற அமைப்பே இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி" ஆகும்.*

## கேள்வி- 6

**மனிதர்களை முன்மாதிரிமிக்கவர்களாக உருவாக்குவதென்பது இன்றைய சூழலில் ஒரு கடினமான பணி. அதனை நீங்கள் எவ்வாறு சாத்தியப்படுத்துகிறீர்கள்?**

**பதில்:** *சமூக மற்றும் தேச நலன்களின் மேம்பாட்டுக்காக உழைப்ப தற்கு விரும்புபவர்களை பொது உடன்பாடொன்றுக்குள் கொண்டு வந்து பணி புரியும் சூழலை நாம் உருவாக்குகின் றோம். அந்தப் பொது உடன்பாடுதான் அவர்களை முன்மாதிரி மிக்கவர்களாக மாற்றுகின்றது.*

## கேள்வி- 7

**பொது உடன்பாடு என்று எதனைக் குறிப்பிடுகின்றீர்கள்?**

**பதில்:** *பணிபுரிபவர்களை நெறிப்படுத்துகின்ற "வழிகாட்டல் தத்துவங்களை" ஜமாஅத் கொண்டிருக்கின்றது. அவற்றின் மீதான உடன்பாட்டையே பொது உடன்பாடு என்று குறிப்பிடுகின்றோம். குறித்த வழிகாட்டல் தத்துவங்களோடு உடன்படாதவர்கள் எம்முடன் சேர்ந்து பணிபுரிய முன்வர மாட்டார்கள்.*

*எடுத்துக்காட்டு: இஸ்லாத்தின் அடிப்படைகளில் உறுதியாக இருத்தலும் கிளையம்சங்களில் விட்டுக்கொடுத்தலும்.*

*இந்த வழிகாட்டல் தத்துவத்தை கௌரவிப்பவர்கள் கருத்து வேறுபாட்டுச் சர்ச்சைகளுக்குள் செல்ல மாட்டார்கள். காரணம், கிளை அம்சங்களில்தான் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அத்தகைய கருத்து வேறுபாடுகளை அங்கீகரித்து, விட்டுக் கொடுத்தால் சர்ச்சைகளோ பிளவுகளோ தோன்றுவதற்கு வழி ஏற்படாது.*

## கேள்வி- 8

**இஸ்லாம் கூறும் கருத்துச் சுதந்திரமா இது?**

**பதில்:** *மேலே குறிப்பிட்டது மார்க்கத்திற்குள் இருக்க வேண்டிய கருத்துச் சுதந்திரமாகும். அதேபோன்று, தேசத்தில் இருக்க வேண்டிய கருத்துச் சுதந்திரத்தை மதிப்பதற்காகவும் ஒரு வழிகாட்டலை இஸ்லாம் தருகிறது. அதுதான்,*

*பன்மைத்துவத்தை மதித்தல்.*

*இனங்கள் சமூகங்களாக இருந்தாலென்ன; கருத்துக்கள் சிந்தனைகளாக இருந்தாலென்ன பன்மைத்துவம் என்பது*

*அனைத்திலும் ஒரு யதார்த்தமாகவே பார்க்கப்படுகிறது; இயற்கையானதாகக் கொள்ளப்படுகிறது. இந்த உண்மையை ஏற்றுக் கொண்டவர்கள், தாம் வாழும் தேசத்தில் சர்ச்சைகளுக்கும் பிளவுகளுக்கும் காரணமாக இருக்க மாட்டார்கள். மாறாக, அங்கு சுதந்திரத்தை வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலுமே கரிசனை கொண்டிருப்பார்கள்.*

## கேள்வி- 9

**பன்மைத்துவம் இயற்கையானது என்றாலும் அதனைத்தான் இன்று அனைவரும் புரளியாக மாற்றுகிறார்கள். ஒவ்வோர் இனமும் அடுத்த இனத்தை அச்சத்துடனேயே பார்க்கிறது. ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவர்களும் ஏனைய மதத்தைச் சார்ந்தவர்களை சவாலாகப் பார்க்கிறார்கள். ஜமாஅத் இது விடயத்தில் எத்தகைய பார்வையைக் கொண்டிருக்கிறது?**

**பதில்:** *பன்மைத்துவம் இயற்கையானதும்தான் சர்ச்சைக்குரியதும் தான். இயற்கையைப் பாதுகாத்து சர்ச்சையைத் தவிர்ப்பதற்கே அனைவரும் முயற்சிக்க வேண்டும். அதற்கு வழி இருக்கிறது. அந்த வழியைப் பின்பற்றினால் சர்ச்சைகள் நிச்சயமாகக் குறையும்.*

*பன்மைத்துவத்தின் பிரச்சினைகளை அணுகும்போது கற்பனைகள், கட்டுக் கதைகள், ஊகங்களுக்கு இடமளிக்காமல். அறிவுக்கும் ஆய்வுக்கும் உண்மையைக் கண்டறிவதற்கும் இடமளித்தல்" என்ற வழிகாட்டலைப் பின்பற்றினால் சர்ச்சையின் வாயில்கள் மூடப்பட்டு புரிந்துணர்வின் வாயில்கள் திறக்கப்படும்.*

*ஜமாஅத் பன்மைத்துவத்தின் பிரச்சினைகளை இந்த வழிகாட்டல்களோடு அணுகுவதனால் அவற்றை சர்ச்சையாக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் அதற்கேற்படுவதில்லை. எனினும்,*

இன்றைய நாட்டுச் சூழலில் கற்பனைகளுக்கும் கட்டுக்கதை களுக்கும்தான் அதிக மவுசு ஏற்பட்டிருக்கிறது.

## கேள்வி- 10

**இந்த வழிகாட்டலை இன்று எவராவது பின்பற்றுவார்கள் என்று கருதுகிறீர்களா?**

**பதில் :** ஏன் இல்லை! முதலாம் உலக நாடுகள் எந்த ஒரு பிரச்சினையையும் அறிவு, ஆய்வு, உண்மையைக் கண்டறிதல் என்ற பரிசோதனைக் குழாய்களூடாகவே பார்க்கின்றன. எனவே, அவர்கள் முன்னேறு கிறார்கள். ஊகங்களும் கற்பனைகளும் கட்டுக் கதைகளும் சோடனைகளும் மூன்றாம் உலக நாடுகளில்தான் அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதனால்தான் முன்னேறாமல் மூன்றாம் நிலைக்கு அவை தள்ளப்பட்டிருக்கின்றன. எமது மீடியாக்களின் பணியே பொய்களையும் ஊகங்களையும் உண்மையாக்குவதுதான். அப்போது மூன்றாம் உலக மக்களின் மனப்பாங்குகள் எங்கே இழுத்துச் செல்லப்படும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

அறிவு, ஆய்வு மற்றும் உண்மையைக் கண்டறிதல் என்ற செயல்பாடுகளுக்கு உலகில் களம் அமைத்துக் கொடுத்த ஒரு சூழலை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறோம்.

நபிகளாரின் காலத்தில் அன்னாரின் பொன்மொழிகள் காது களினூடாக வாய்களுக்கும் வாய்களினூடாகக் காதுகளுக்கும் பரிமாறப்படும் நிலையே இருந்தது. இந்நிலை தொடர்ந்தால் நபிமொழிகளில் உண்மையானவை எவை; போலிகள் எவை என்ற குழப்பமே பிற்காலத்தில் மிஞ்சும் என அஞ்சிய ஆரம்ப கால எமது மூதறிஞர்கள் நபிமொழிகளின் உண்மைத்தன் மையைக் கண்டறிவதற்கு அற்புதமானதொரு வழிமுறையைக்

கையாண்டார்கள். தமது செவிக்கு வந்து சேரும் ஒவ்வொரு நபிமொழியையும் அதன் அறிவிப்பாளர் வரிசையை ஆராயாமல் ஏற்பதில்லை என்ற முடிவுக்கு வந்தார்கள். அறிவிப்பாளர் வரிசையில் ஒவ்வொருவரும் நேர்மையானவரா, உண்மையானவரா, மறதியற்றவரா, நம்பத்தகுந்தவரா, அறிவிப்பாளர் வரிசையில் தனக்கு முன்னும் பின்னும் உள்ளவரை குறித்த நபர் சந்தித்திருக்கிறாரா என மிக விரிவாக அறிப்பாளர்களது வாழ்க்கையை இதற்காக ஆராய்ந்தார்கள் அன்றைய அறிஞர்கள்.

அதன்விளைவாக, ஐந்து இலட்சம் அறிவிப்பாளர்களது வாழ்க்கை நுணுக்கமாகப் படிக்கப்பட்டு அவை நூல்களாகத் தொகுக்கப்பட்டது என்ற அதிசயத்தை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அறிவு, ஆய்வு, உண்மையைக் கண்டறிதல் என்ற செயற்பாடுகளுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் தான் அது.

ஹதீஸ் (நபி மொழி) துறை இவ்வாறு இன்னும் பல ஆய்வுகளோடு வளர்ந்த காரணத்தால் எந்தவொரு செய்தியையும் ஆதாரங்கள் இல்லாமல், ஆய்வுகள் இல்லாமல் நம்பும் பழக்கம் அக்காலத்தில் மிகக் குறைவாகவே இருந்தது. அது அறிவியல் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கம் பாதுகாக்கப்படுவதற்கும் பங்களிப்பு செய்தது. அந்த உன்னதமான மரபை இன்று அநேகர் புறக்கணித்துவிட்டனர். குறிப்பாக, மூன்றாம் உலக நாடுகளில் உள்ள தலைவர்கள் மற்றும் வழிகாட்டிகள் அந்த அறிவியல் செயற்பாடுகளை குழிதோண்டிப் புதைத்துவிட்டார்கள் என்றே கூறவேண்டும்.

## கேள்வி- 11

**இவ்வாறான சிந்தனைகளைக் கொண்டிருக்கும் நீங்கள் இலங்கையில் என்ன செய்ய விரும்புகின்றீர்களா? உங்களது கனவு நனவாகினால் இலங்கை நாடு எப்படியிருக்கும்?**

**பதில் :** முதலில், இலங்கையில் செயல்படுவதற்காக நாம் வரைந் திருக்கும் வழிகாட்டல் தத்துவங்களைப் பாருங்கள்:

*1.* இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி இலங்கைக்கானதோர் அமைப்பாக செயல்படுதல் என்பது எமது அடிப்படையான தத்துவமாகும். அதாவது, இலங்கை பிரஜைகளாக இருப்ப வர்களே அதில் அங்கத்துவம் பெற முடியும்... ஜமாஅத்தே இஸ்லாமி என்ற பெயரிலோ அல்லது வேறு பெயர்களிலோ உலகின் எப்பாகத்தில் செயல்படுகின்ற எந்தவோர் அமைப் புடனும் கட்டுப்பாட்டுடன் கூடிய உத்தியோகபூர்வ உறவை ஜமாஅத் கொண்டிராது. இலங்கை நாட்டின் சட்டத்துக்கமை வாகவும் சாத்வீகமான வழிமுறைகளைக் கையாண்டுமே ஜமாஅத் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிக்கும். இலங்கையின் அமைதிக்கும் அபிவிருத்திக்கும் இடையூறாக ஜமாஅத் ஒரு போதும் செயல்பட மாட்டாது.

இலங்கை தொடர்பில் இத்தகைய வழிகாட்டல்களுடனேயே இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக செயல்பட்டு வருகின்றது. இந்த வழிகாட்டல் தத்துவங்கள் ஜமாஅத்தின் யாப்பிலும் இடம்பெற்றிருக் கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமல்ல, பலதரப்பினருடனும் இணைந்து எமது பங்களிப்புடன், இலங்கையில் என்ன பணி செய்யலாம் என்பதையும் ஜமாஅத் அடையாளப்படுத்தியிருக்கிறது. அவையாவன:

*1)* இன, மத பேதமின்றி மனித நலன்களின் மேம்பாட்டுக்காக உழைத்தல்

*2)* இயற்கை வளங்களைப் பாதுகாத்து மேம்படுத்தல்

*3)* நல்லாட்சி என்ற இலக்கோடு பணிபுரிபவர்களுக்கு உதவுதல்

4) விழுமிய ஊடகக் கலாசாரத்தை மேம்படுத்தல்

5) "நாம் இலங்கையர்" என்ற மகுடத்தில் நல்லதொரு சிவில் சமூகத்தை உருவாக்குதல்.

இவற்றோடு இலங்கை முஸ்லிம் சமூகம் இலங்கைக்குப் பொருத்தமானதொரு சமூகமாக வாழ வேண்டும்; இலங்கையில் இருந்து கொண்டு, ஒரு சஊதி சமூகமாகவோ, எகிப்து சமூக மாகவோ, பாகிஸ்தான் சமூகமாகவோ வாழும் பிரமையை அவர்கள் ஏற்படுத்தக் கூடாது என்பதிலும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி கவனம் செலுத்துகிறது.

அந்த வகையிலும் முஸ்லிம்களை நெறிப்படுத்துகின்ற வழி காட்டல்கள் விடயத்தில் பரவலானதொரு புரிந்துணர்வை ஏற் படுத்த அது முனைகிறது. அத்தகைய வழிகாட்டல்களாவன:

1) வெளித் தோற்றங்களுக்கோ அடையாளங்களுக்கோ கொடுக் காத முக்கியத்துவத்தை நற்குணங்களுக்கு வழங்குதல்.

2) சூழலைக் கருத்தில் கொள்ளாமல் இஸ்லாமிய சட்டத் தீர்ப்பு களை இறுக்கமாக செயல்படுத்தும் போக்கைக் கைவிட்டு விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் அமைதி, சுபிட்சம், மனித நலன் என்பவற்றை மேம்படுத்துவதற்கும் முன்னுரிமை வழங்குதல்.

3) இறைவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளில் சிலபோது குறை ஏற்பட்டாலும் மனிதர்களுக்கு செய்ய வேண்டிய கடமை களில் குறை வைக்கும்போது அல்லது அக்கடமைகளுக்குப் பங்கம் விளைவிக்கும்போது சுவர்க்கம் கிடைக்காது போகலாம் என்ற இஸ்லாத்தின் போதனையைக் கருத்தில் கொள்ளல்.

4) நோக்கங்கள் தூய்மையாக இருந்து விட்டால் வழிமுறைகள்

பிழையாக இருப்பது பிரச்சினையல்ல என்ற கோட்பாட்டை நிராகரித்தல்.

5) பிளவுபடுத்தி உயர்வதை விட இணக்கத்தோடு பணிந்து செல்வதை உயர்வாகக் கருதுதல்.

6) தலைமைத்துவங்களை எல்லா இடங்களிலும் மதித்து நடந்து கொள்ளல். கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுத்த பின் அவசியமான சந்தர்ப்பங்களில் முறையான நெறிப்படுத்தல்களை மேற்கொள்ளல்.

இத்தகைய விழுமியங்களைப் பேணும் ஒரு முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் உருவாக வேண்டும் என்பதே ஜமாஅத்தின் ஆசையாகும்.

ஆக, அ) நாடு பற்றிய எமது பார்வை, ஆ) நாட்டில் நாம் செய்ய விரும்புகின்ற பணிகள், இ) இந்த நாட்டில் முஸ்லிம் சமூகம் எப்படி வாழ வேண்டும் என்ற எமது எதிர்பார்ப்பு அனைத்தும் நிறைவேறினால், நீங்கள் கேட்டது போல் இந்த நாடு எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்.

❖ வளங்கள் கொழிக்கின்ற...

❖ ஜனநாயக விழுமியங்கள் பாதுகாக்கப்பட்ட...

❖ அபிவிருத்தியடைந்த...

ஒரு நாடாக இலங்கை இருக்கும்.

அந்த நாட்டுக்கு சாதகமான பங்களிப்புகளை வழங்குகின்ற முன்மாதிரிமிக்க சமூகமாக முஸ்லிம் சமூகம் இருக்கும்.

எமது கனவு நனவானால் இலங்கை எப்படியிருக்கும் என்பதற்கான விளக்கமே இது.

## கேள்வி- 12

**அவ்வாறாயின், இலங்கையில் இஸ்லாமிய ஆட்சி ஒன்று மலர வேண்டும் என்று நீங்கள் ஆசைப்படவில்லையா?**

**பதில்:** *இலங்கையில் எமது எதிர்பார்ப்பு என்ன என்பதைத் தெளிவாக சொல்லிவிட்டோம். அந்த எதிர்பார்ப்பும் ஒரு கனவுதான். இஸ்லாமிய ஆட்சியைப் பொறுத்தவரை அவ்வாறான தொன்றுக்காக கொள்கை வகுக்கவோ திட்டமிடவோ அழைப்பு விடுக்கவோ ஜமாஅத் என்றும் ஒரு தீர்மானம் எடுத்ததில்லை.*

## கேள்வி- 13

**இருப்பினும், ஜமாஅத்தே இஸ்லாமியை விமர்சிப்போரில் பலர் ஆட்சியோடும் அரசியலோடும் ஜமாஅத்தே இஸ்லாமியைத் தொடர்புபடுத்தியே விமர்சிக்கின்றார்கள், அது ஏன்?**

**பதில்:** *அது ஏன் என்பதை அவர்களிடம்தான் உண்மையில் வினவ வேண்டும். இருப்பினும், எமது கணிப்பின்படி அவ்வாறு அவர்கள் விமர்சிப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம் என்று ஊகிக்கின்றோம்.*

*1)* *ஜமாஅத்தே இஸ்லாமி என்ற பெயர் பிரபலமானது. அந்த பிர பலத்தோடு அரசியலும் இணைந்தே இருக்கிறது. குறிப்பாக, பாகிஸ்தான் ஜமாஅத்தே இஸ்லாமி மற்றும் பங்களாதேஷ் ஜமாஅத்தே இஸ்லாமி என்பன அந்தந்த நாடுகளின் முக்கிய அரசியல் கட்சிகளாக இருக்கின்றன. எனவே, இவர்களும் அவர்களைப் போன்றவர்கள்தான் என்று இந்த விமர்சகர்கள் கணித்திருப்பார்கள். இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி கட்சி*

அரசியலுக்கு அப்பால் இருந்தே செயல்படும் என்ற நிலைப் பாடு எமது யாப்பில் அன்றுதொட்டு இன்றுவரை இருப்பதை இவர்கள் அறிந்திருப்பார்களோ இல்லையோ, இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி ஆட்சியைப் பிடிக்க விரும்பும் அமைப்பு என்று தூக்கத்திலும் சிலபோது சொல்லி விடுவார்கள். இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி பாகிஸ்தானின் அல்லது பங்களாதேஷின் போட்டோ கொப்பி அல்ல, அவற்றோடு கட்டுப்பாட்டுடன் கூடிய உத்தியோகபூர்வ உறவு எதுவும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமிக்கு இல்லை என்ற எமது நிலைப்பாடும் இவர்களுக்கு தெரியாதா என்பது எமக்குப் தெரியவில்லை.

2) இஸ்லாமிய ஆட்சியோடு இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியை சம்பந்தப்படுத்துவதற்கு மற்றுமொரு காரணமும் இருந் திருக்கலாம். அதுதான் முஸ்லிம் உலகத்தின் அரசியலை விமர்சனம் செய்வதில் ஜமாஅத்தின் சஞ்சிகையான அல்ஹஸ னாத் வகித்த பங்கு.

முஸ்லிம் உலகின் அரசியலையும் அதன் போராட்டங்களையும் அவற்றின் சாதக, பாதகங்களையும் விமர்சிக்கும் வகையில் பெரும்பாலும் ஒரு கட்டுரை ஒவ்வொரு இதழிலும் வராமல் இருந்ததில்லை என்று கூறுமளவு அரசியல் விமர்சனத்திற்கு ஜமாஅத் ஓர் இடத்தைக் கொடுத்திருக்கின்றது. இலங்கை அரசியல் பற்றிய விமர்சனங்களையும் அது தொடர்ந்தும் செய்து வந்திருக்கிறது. இத்தகைய அரசியல் விமர்சனங் களைக் காத்திருந்து வாசிப்போர்தான் அதன் வாசகர்களில் அதிகமானவர்கள்; தருணம் பார்த்திருந்து விமர்சிப் போர் குறைவு என்றே கருதுகிறோம். எமது இந்த அரசியல் ஈடு பாடும் நாம் அரசியல் பிரியர்கள் என்ற தோற்றப்பாட்டை இவர்களிடம் ஏற்படுத்திருக்கலாம்.

## கேள்வி- 14

**நீங்கள் உண்மையில் அரசியல் பிரியர்கள் இல்லையா?**

**பதில்:** *அரசியல் என்றாலே வாந்தி எடுப்பவர்கள்தான் எம்மில் அதிகமானவர்கள். இருப்பினும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி விழுமிய அரசியல் ஒன்றுக்காக... அல்லது ஜனநாயக மரபுகளை மேம்படுத்துவதற்காக உழைப்பவர்களுக்கு ஒத் துழைக்கவே விரும்புகின்றது. கட்சி அரசியலுக்கு வெளியே நின்றவர்களாக இந்த ஒத்துழைப்பு மற்றும் உதவிகளை வழங்குவதென்பது எமது முடிவாகும்.*

## கேள்வி- 15

**அரசியல் ஆர்வம் உள்ளவர்களை அரசியல் ஈடுபாட்டுக்கு அனுமதிக்காமல் தடுத்து வைக்கின்ற ஒரு வேலையை நீங்கள் இதன் மூலம் செய்கின்றீர்கள் என்ற குற்றச்சாட்டு உங்களுக்கு எதிராக வரமாட்டாதா?**

**பதில்:** *ஜமாஅத் தன்னை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்து தேர்தலில் போட்டியிட மாட்டாது என்பதுதான் எமது தீர்மானமே தவிர, ஜமாஅத் அங்கத்தவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்றவகையில் அவர்களது அரசியல் ஈடுபாட்டுக் குத் தடை விதிக்கும் நோக்கம் எம்மிடமில்லை. ஜமாஅத் அங்கத்தவர் ஒருவர் கட்சி அரசியலுக்கு செல்ல விரும்பினால் ஜமாஅத்தில் தனது அங்கத்துவத்தை இராஜினாமா செய்து விட்டு, தான் விரும்பும் அரசியல் கட்சியிலோ அல்லது சுயேச் சையாகவோ தனது அரசியல் பயணத்தை அவர் துவங்கலாம். அது இந்த நாட்டுப் பிரஜைகளின் உரிமை; அதனை எங்களால் தடுக்க முடியாது.*

## கேள்வி- 16

**NFGG க்கும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமிக்கும் இடையில் உள்ள உறவு என்ன? நீங்கள்தான் அதனை உருவாக்கினீர்களா?**

**பதில்:** **PMGG** *என்ற பெயரில் ஏற்கனவே ஒரு குழு இயங்கி வந்ததை நீங்கள் அறிந்திருக்கலாம். இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி அங்கத்தவர்களில் ஓரிருவர் அந்தக் குழுவோடு இணைந்து அரசியல் செயல்பாட்டை முன்னெடுக்க விரும்பியபோது எமது நிலைப்பாட்டின் பிரகாரம் அங்கத்துவத்தை இராஜினாமா செய்து விட்டு செல்லுமாறு அவர்களை ஜமாஅத் கேட்டுக் கொண்டது. அவர்களும் அவ்வாறே செய்தார்கள். நடந்தது அவ்வளவுதான்.*

## கேள்வி- 17

**NFGG யுடன் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமிக்கு ஒரு சினேகபூர்வமான உறவு இருப்பதாக சிலர் சொல்கிறார்கள்.**

**பதில்:** **JVP, UPM** *போன்ற பலரோடு இருக்கின்றது. அவ்வாறுதான்* **NFGG***யுடனும்.*

*நாட்டு நலன்களை முன்னுரிமைப்படுத்தி பேசுகின்ற மற்றும் செயற்படுகின்றவர்களோடு நல்லுறவு இல்லாவிட்டால் நாம் இருந்து என்ன பயன்? அவர்களுக்கு முடியுமான ஒத்துழைப்புக் களை வழங்கா விட்டால் நாம் பேசும் நாட்டு நலனுக்கு என்ன பொருள்? அதனால் நாங்கள் அவர்கள் ஆகிவிடுகிறோம் அல்லது அவர்கள் ஜமாஅத்தே இஸ்லாமியாகி விடுகிறார்கள் என்பது பொருளல்ல.*

## கேள்வி- 18

**SLMC ஐயும் ஜமாஅத்தான் உருவாக்கியது என்று இப்போது ஒருவர் கூறுகிறார்; உண்மை என்ன?**

**பதில்:** *SLMC இரகசியமானதுமல்ல... SLJI இரகசியமானதுமல்ல. எனவே, ஆதாரமிருந்தால் நிரூபிக்குமாறு கூறுங்கள். அதே நேரம்,திருமதி பேரியல் அஷ்ரப் மற்றும் SLMC இன் இரண்டாவது தலைவர் கௌரவ ஹகீம் உட்பட SLMC இன் வளர்ச்சிக்காக உழைத்தவர்கள் மற்றும் அதன் ஏற்ற இறக்கங்களில் SLMC ஐ நிழல்போல் தொடர்ந்தவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் இன்றுமிருக்கிறார்கள் அவர்களிடமும் கேட்டுப் பார்க்கலாமல்லவா?*

## கேள்வி- 19

**அரசியலோடு சம்பந்தமுமில்லை; இலங்கைக்கானதோர் அமைப்பு என்றும் கூறுகிறீர்கள். அவ்வாறாயின், ஜமாஅத்தே இஸ்லாமி என்ற பெயரை ஏன் வைத்துக் கொண்டீர்கள்?**

**பதில்:** *1954 இல் இந்த அமைப்பை ஸ்தாபித்தவர்கள் வைத்த பெயர் அது. அந்த ஸ்தாபக அங்கத்தவர்களில் எவரும் ஜமாஅத்தின் தற்போதைய களத்தில் இல்லை. அவர்கள் வைத்த பெயர் தொடர்கிறது அவ்வளவுதான்.*

## கேள்வி- 20

**அவர்கள் வைத்த பெயரை நீங்கள் மாற்றியிருக்கலாம் அல்லவா?**

**பதில்:** *பெயரை மாற்றுவது நல்லது. இந்தப் பெயரால் தான் நாங்கள் இயங்க வேண்டுமென்பதில்லை என்ற கலந்துரையாடல் பல*

*சந்தர்ப்பங்களில் நடைபெற்றிருக்கிறது. அதில் உடன்பாடு இருந்தாலும் பெயர் மாற்றும் வேலையை நாம் செய்ய வில்லை. பெயர் மாற்றத்தினை ஜமாஅத் உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டாலும் சமூகத்தின் வியாக்கியானங்களுக்கு பதில் சொல்லிக்கொண்டிருக்க அவசியமில்லை என்ற வகையில் அதனை நாம் தவிர்த்துக் கொண்டோம்.*

## கேள்வி- 21

**4/21 பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து பயங்கரவாதத்தின் அடிமரம், ஆணி வேர், பக்கவேர் என்பவற்றையெல்லாம் அரித்துத் தேடுகின்றதொரு படலம் துவக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஜமாஅத்தே இஸ்லாமியையும் அதனோடு இணைத்துப் பேச சிலர் துவங்கி இருக்கிறார்கள். இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்?**

**பதில்:** *ஜமாஅத்தே இஸ்லாமி 60 வருடங்களுக்கு மேலாக திறந்த முகவரியோடு நாட்டில் வேலை செய்து வரும் ஓர் அமைப் பாகும். பயந்து... ஒளிந்து... இரகசியமாக... வேலை செய்த ஓர் அமைப்பாக அது என்றும் இருந்ததில்லை.*

*பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதம் என்பவற்றின் அறிகுறிகள் முற்றிலும் வேறுபட்டவை. வெளிப்படையாக வேலை செய்யும் ஓர் அமைப்பிடம் நிச்சயமாக அவை இருக்க முடி யாது. உதாரணமாக. முரண்படுதல்... ஒதுங்குதல்... தனிமைப் படுதல்... இரகசியம்பேணுதல். இரகசியக் குழுவினர் மத்தி யில் தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள் என்போரிடம் இருப்பதைவிட அளவுகடந்த அன்பும் மரியாதையும் கொண்டிருத்தல்... குறித்த குழுவுக்கு வெளியே இருப்பவர் களின் எந்தக் கருத்தையும் மதிக்காமை... அதேநேரம் தமது உறவினர், நண்பர்கள் போன்ற நெருக்கமானவர்களை ஏமாற்றி தாம் நல்லவர்கள் என்பதை நம்பவைக்கும் தந்திரம்...*

அதற்காக பொய் கூறுவதை ஆகுமாக்கிக் கொள்ளல்... ஏன் என்று விளங்கா விட்டாலும் யாராவது ஒரு சாரார் மீது தீராப் பகை... வலிந்து அவர்கள் மீதான வெறுப்பை ஊட்டுதல்.. சட்டங்கள் என்று தாம் நினைப்பவற்றை அமுல்படுத்துவதில் சூழலையும் மனிதர்களையும் அவர்களது யதார்த்தங்களையும் மறந்து விடுமளவு கடும் தீவிரம்... சிரிப்பு, மலர்ந்த முகம், உல்லாசம் என்பவற்றுக்கு விடைகொடுத்து விடல்... தோற்றத்தில் விகாரம்... பார்வையில் சந்தேகம்...

தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தின் இதுபோன்ற அறிகுறிகள் அனைத்தையும் இஸ்லாம் தடை செய்திருக்கிறது. அவ்வாறு தடை செய்யப்பட்ட எந்த அறிகுறியும் ஜமாஅத் உறுப்பினர்களிடையே வளர்வது சிரம சாத்தியமானது. காரணம், நாம் ஏற்கனவே குறிப்பிட்ட வழிகாட்டல் தத்துவங்கள் மீதான உடன்பாட்டு அடிப்படையில் பணியாற்றுபவர்கள்தாம் ஜமாஅத்துடன் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வழிகாட்டல் தத்துவங்கள் தீவிரவாதப் பண்புகளுக்கு நேர் எதிரானவை.

எனவே, ஜமாஅத்தே இஸ்லாமி போன்றதோர் அமைப்பிலிருந்து தீவிரவாதம் வளர்வதற்கு எந்த நியாயமும் இல்லை. அவ்வாறு வளர்ந்ததாக யாராவது கூறுபவர்கள் இருந்தால், ஜமாஅத்தின் வழிகாட்டல் தத்துவங்கள் மீதான உடன்பாட்டை முரண்பாடாக மாற்றிக் கொண்டு தீவிரவாதத்தின் அறிகுறிகளுக்கு இலக்காகி ஜமாஅத்தில் இருந்து வெளியேறியவர்களாகவோ அல்லது வெளியேற்றப்பட்டவர்களாகவோதான் அவர்கள் இருப்பார்கள். அல்லது ஜமாஅத்தே இஸ்லாமியை உரிய முறையில் புரியாதவர்கள் அவ்வாறு கூற முடியும். அவர்களுக்கு அல்லாஹ்தான் தெளிவான விளக்கங்களைக் கொடுக்க வேண்டும்.

## கேள்வி- 22

**பிறரோடு முரண்படுதல், ஒதுங்குதல், இரகசியம் பேணுதல் போன்ற தீவிரவாத அறிகுறிகள் பற்றிக் கூறினீர்கள். நீங்கள் எவரோடும் முரண்படவில்லையா? ஒதுங்கிச் செல்லவில்லையா? சம்பிரதாய முஸ்லிம்கள் பற்றிய உங்களது கருத்து என்ன?**

**பதில்:** இந்தக் கேள்விக்கான பதிலை விளக்குவதற்கு இரண்டு சொற்கள் தேவைப்படுகின்றன.

1. வேறுபடுதல்
2. முரண்படுதல்

ஜமாஅத் வேறுபடுதலை ஒரு யதார்த்தமாகக் கருதுகின்றது. முரண்படுவதை ஒரு சாபக்கேடாகப் பார்க்கின்றது. இன்னும் சொன்னால், வேறுபடுதல் ஒரு மனிதனதோ அமைப்பினதோ சுதந்திரத்தின் பாற்பட்டது. முரண்படுதல் அடுத்த மனிதனின் அல்லது அமைப்பின் சுதந்திரத்தில் அநாவசியமாகத் தலையிடு வதாக இருக்கின்றது.

இந்த வகையில் ஜமாஅத் வேறுபடுகின்ற உரிமை மற்றும் சுதந்திரம் என்பவற்றை மதித்து... அதேநேரம் முரண்பட்டுப் பிளவுறும் நிலை வராமல் இருக்கவே தன்னாலானவரை முயற்சிக்கின்றது. எமது எழுத்துக்கள், பேச்சுக்கள் என்பவற் றோடு பரிச்சயமானவர்களுக்கு இந்த உண்மையை நாம் விளக்க வேண்டியதில்லை.

இந்த வரையறையை மீறி எழுதுகின்றவர்கள் மற்றும் பேசு கின்றவர்களை ஜமாஅத் கண்டிக்கின்றது; திருத்துகின்றது. சிலபோது அத்தகைய சிலருக்கு ஜமாஅத்தின் மேடைகளைப் பயன்படுத்த தற்காலிகமாக தடை விதிக்கின்றது. அனைத் தையும் மிஞ்சிப் போனால் சம்பந்தப்பட்டவர்களுடனான உறவை ஜமாஅத் துண்டித்துக் கொள்கிறது.

ஜமாஅத் சமூகத்தோடு ஒட்டாமல் ஒதுங்கிச் செல்லும் போக்குடையதா என்ற வினாவைப் பொறுத்தவரை அவ்வாறு ஒதுங்கிச் செல்வதை ஒருவகை ஒவ்வாமையாகவே நாம் கருதுகின்றோம் என்ற பதிலைத்தான் கூற வேண்டும்.

ஜமாஅத்தையும் அதன் சிந்தனைகளையும் புரிந்து கொண்டவர்கள் சமூகத்தை விட்டு ஒருபோதும் ஒதுங்கிச் செல்ல மாட்டார்கள். ஒதுங்கிச் செல்பவர்களையும் அரவணைக்கவே அவர்கள் முயற்சிப்பர். இருப்பினும், எம்மைப் புரிந்து கொள்ளாதபோது ஒரு சிலர் எங்களை ஒதுக்க முயற்சிப்பார்கள். எனினும், சிறிது காலத்தில் அந்த நிலை மாறி மக்களோடு இரண்டறக் கலந்து செயல்படும் நிலை வந்து விடும். அதன் பொருள், மக்கள் ஜமாஅத்தைப் புரியாமல் அச்சத்தோடு பார்க்கும் நிலை நீங்கி விடுகிறது என்பதே. தீவிரவாதத்தின் பண்புகள் எம்மிடமிருந்தால் அந்த நிலை ஒருபோதும் வர முடியாதல்லவா?

சமூகப் பணிகளிலும் தேசப் பணிகளிலும் முஸ்லிம்கள். முஸ்லிமல்லாதவர்கள் என்ற வேறுபாடில்லாமல் அனைவருடனும் இணைந்து செயல்படுவதையே இந்த வகையில் ஜமாஅத் விரும்புகிறது. அதில் இன்னும் நீண்ட தூரம் நாம் முன்னேற வேண்டியிருக்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

சம்பிரதாய முஸ்லிம்கள் பற்றிக் கேட்டீர்கள். இன்ன இன்னவர்கள் தான் சம்பிரதாய முஸ்லிம்கள்; ஏனைவர்கள் அவர்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்ற பிரிப்பு எம்மிடமில்லை. மாறாக, நாங்கள் ஒரு கருத்தை சமூகத்திற்கு கூறிவருகிறோம். பிறந்ததற்காக முஸ்லிம்களாக வாழ்ந்துவிட்டுப் போகாமல் வாழும் நாட்டையும் உலகத்தையும் மார்க்கத்தையும் விளங்கி வாழுங்கள். அப்போதுதான் நீங்களும் உங்களால் உங்களது தேசமும் அதிக நன்மையடையும். மறுமையிலும் நீங்கள் வெற்றி பெற்றவர்களாக இருப்பீர்கள்.

*இந்தக் கருத்தையும் கூட சொல்வதுதான் எமது கடமை; கேட்கும் உரிமையோ, மறுக்கும் உரிமையோ அனைவருக்கு மிருக்கிறது. மறுப்பவர்களை நாம் எமது எதிரிகளாகப் பார்ப்ப தில்லை. அதாவது, வேறுபாட்டை நாம் முரண்பாடாக மாற்றிக் கொள்ள விரும்புவதில்லை.*

*அதேநேரம் சம்பிரதாய முஸ்லிம்கள் என எங்களில் ஒரு சாராரைப் பிரித்துப் பார்ப்பவர்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும் போலிருக்கிறது. 1915இல் முஸ்லிம்களுக்கெ திரான கலவரம் வெடித்த போது நீங்கள் கூறும் சம்பிரதாய முஸ்லிம்கள்தான் நூற்றுக்கு நூறு வீதம் இலங்கையில் இருந்தார்கள். அப்போது ஏன் அவர்கள் நல்லவர்களாகப் பார்க்கப்படவில்லை? இப்போது எப்படி அவர்கள் நல்லவர் களானார்கள்?*

## கேள்வி- 23

**அது வினவப்படவேண்டிய விடயம்தான். அதேநேரம், உங்களுக்கு எதிரிகள் என்று யாருமே இல்லையா? உங்களை எதிர்ப்பவர்கள் பலர் இருக்கிறார்களே!**

**பதில்:** *எங்களைப் போன்றுதான் எல்லோரும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால் அத்தகையவர்களுக்கு உலகில் எதிரிகள் தான் அதிகமாக இருப்பார்கள். எங்களையும் யாராவது அவ்வாறு எதிரிகளாக்கிக் கொண்டால் நாம் என்ன செய்ய முடியும்! ஒவ்வொரு சமூகத்திற்கும் தனித்தன்மை இருக்கிறது. அது அவர்களுடையது; இது எங்களுடையது என்ற நிலைப் பாட்டில் வாழ்ந்தால் எதிரிகள் குறைந்து விடுவார்கள். புரிந் துணர்வை வளர்ப்பது வேறு; புரியாத உணர்வுகளைத் திணிப் பது வேறு. இந்த உண்மையை உணர்ந்து செயல்பட்டால் எதிரிகளைப் பெருமளவு குறைத்துக் கொள்ளலாம்.*

அதேநேரம், எங்களுக்கும் எதிரிகள் இருக்கிறார்கள் என்பதை கூறித்தான் ஆக வேண்டும். அவர்கள் இன்றைய உலகில் வேறு யாருமல்ல, தங்களது ஏகாதிபத்திய நலன்களுக்காக சமூகங் களையும் நாடுகளையும் பகடைக்காய்களாகப் பயன்படுத்து பவர்கள், சமூகங்களிடையே காய்நகர்த்துபவர்கள். அத்த கையவர்களைக் கண்டுபிடித்துச் சொல்லுங்கள் என்றுதான் 4/21 தாக்குதலின் பின் கர்தினால் மெல்கம் ரஞ்சித் அவர்கள் தொடர்ந்தும் கூறி வருகிறார்கள்.

எதிரிகள் பற்றிய இந்தப் பார்வையில் கௌரவ கர்தினால் அவர்களோடு நாம் ஒன்றுபடுகிறோம்.

## கேள்வி- 24

**இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிராக செயல்படும் இனவாத அமைப்புகளை எவ்வாறு பார்க்கிறீர்கள்? அவர்கள் எதிரிகள் இல்லையா?**

**பதில்:** SLMC இன் தலைவர் கௌரவ ரஊப் ஹகீம் அவர்கள் இதே போன்றதொரு வினாவுக்கு பதிலளிக்கையில் பின்வருமாறு கூறினார்: அரசியலுக்கு ஓர் எதிரி வேண்டும். எதிரி இல்லாமல் அரசியல் செய்வது சிரமம் என்ற நிலை இன்று ஏற்பட்டுள் ளது. அந்த வகையில் இலங்கையின் அரசியல் களம் முஸ்லிம் சமூகத்தை இன்று எதிரியாக மாற்றியுள்ளது. ஆம், நேற்றைய எதிரியாக தமிழர்கள் இருந்தார்கள். இன்றைய எதிரியாக முஸ்லிம்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு என்ன கூற இருக்கிறது? நாளைய எதிரிகள் தலைகீழாகவும் மாறலாம்.

## கேள்வி- 25

**எதிரிகள் இல்லாத உலகில் சண்டை எதற்கு? எனவே, அமைதியாக இருந்து விடுவோம் என்று கருதுகிறீர்களா? ஜிஹாத் பற்றிய உங்களது கருத்து என்ன?**

**பதில்:** *முஸ்லிம்களில் சொற்பமானவர்களும் முஸ்லிமல்லாதவர் களில் அதிகமானவர்களும் ஜிஹாதை வீணாக குழப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்றே கூற வேண்டும். ஒரே வார்த் தையில் கூறினால் ஜிஹாத் என்பது ஒர் அரசு நாட்டின் பாதுகாப்புக் கருதி முன்னெடுக்கும் இராணுவ செயற் பாட்டையே குறிக்கிறது. அது வேத நூலாகிய குர்ஆனில் வந்திருப்பதனால் குர்ஆனை செயற்படுத்துகிறோம் என்ற நிலைப்பாட்டில், நினைத்தவர்கள் எல்லாம் அதனை அமுல் படுத்திவிட முடியாது. இந்த உண்மை சமூகத்துக்கு நன்கு தெரியும். அதனால் முஸ்லிம்கள் இலங்கை நாட்டில் ஜிஹாத் ஒன்று நடைபெற வேண்டும் என்று பேசுவதில்லை; அழைப்பு விடுப்பதுமில்லை.*

*முஸ்லிம்கள் குர்ஆனை அனுதினமும் ஓதுகிறார்கள், மனனம் செய்கிறார்கள். எனினும், அவர்கள் பேசாதளவுக்கு முஸ்லி மல்லாத பலர் ஜிஹாதைப் பற்றி இன்று பேசுகிறார்கள் என்பது ஆச்சரியமில்லையா? இப்படிச் சொன்னால் 4/21 தாக்குதலை நடத்தியவர்கள் யார் என்று திருப்பிக் கேட்பார்கள். அந்தத் தாக்குதல் தொடர்பான தகவல்களை அறிந்திருந்தும் அதனை நடக்கவிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்களே அவர்களுக்குத்தான் அந்த உண்மை நன்கு தெரிந்திருக்கும். என்று கூறுங்கள்*

## கேள்வி- 26

**நீங்கள் மார்க்கத்தை எந்த மூலங்களிலிருந்து கற்கிறீர்கள்? எந்த அறிஞர்களை உங்களது அமைப்பின் வழிகாட்டிகளாகக் கொள்கிறீர்கள்? மௌலானா மௌதூதி, யூஸுஃப் அல் கர்ழாவி போன்றோர் பற்றிய உங்களது கருத்து என்ன? நீங்கள் பின்பற்றும் அறிஞர்கள் தீவிரவாதத்தைப் போதிப்பவர்கள் என்ற குற்றச்சாட்டும் தற்போது முன்வைக்கப்படுகிறது.**

**பதில்:** *முதலில் அறிஞர்கள் பற்றியும் அவர்களைப் பின்பற்றுவது பற்றியுமான எமது நிலைப்பாட்டைக் கூறுவது பொருத்த மாக இருக்கும் எனக் கருதுகின்றோம்.*

*இறைத் தூதர்கள் மற்றும் நபிமார்கள் தவிர்ந்த அனைத்து அறிஞர்களும் நூறு வீதம் சரியானவர்களாக இருக்க முடியாது. நூறு வீதம் சரியானவர்கள் நபிமார்கள் மட்டுமே என்ற கருத்து உலகளாவிய முஸ்லிம் சமூகத்தின் நம்பிக்கையாக அன்று தொட்டு இன்று வரை இருந்து வருகின்றது.*

*ஓர் அறிஞர் அவரது காலத்துக்கு பொருந்துகின்ற வகையில் சொன்னதொரு விளக்கம் இன்னொரு காலத்துக்கோ சூழலுக்கோ பொருந்தாமல் இருக்கலாம்... அல்லது அவர் கூறியதொரு விளக்கத்துக்கு போதுமான குர்ஆன் மற்றும் சுன்னா ஆதாரங்களை அவரால் முன்வைக்க முடியாது போயிருக்கலாம் போன்ற பல்வேறு காரணங்களால் அறிஞர் கள் நூறு வீத குறையுள்ளவர்களாகப் பார்க்கப்படா விட்டாலும் நூறு வீதம் நிறையுள்ளவர்களாகப் பார்க்கப்படு வதில்லை.*

*அதேநேரம், முஸ்லிம் சமூகத்தில் தோன்றிய அறிஞர்கள் அனைவரும் முஸ்லிம் சமூகத்தின் புலமைச் சொத்தாகவும் பார்க்கப்படுகிறார்கள்.*

அறிஞர்கள் பற்றிய இந்த இரண்டு பார்வையும் ஜமாஅத்திடம் இருக்கிறது. அதன் விளைவாக, அறிஞர்கள் விடயத்தில் ஜமா அத் பின்வரும் நிலைப்பாடுகளுடன் செயல்படுகிறது.

1. அறிஞர்கள் அனைவரும் எமது சமூகத்தின் புலமைச் சொத்து. எனவே, எந்த அறிஞரையும் தூற்றவோ அவமதிக்கவோ கூடாது.

2. அறிஞர்கள் அனைவரும் படிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களது ஆக்கங்களைப் படிப்பதன் ஊடாக அறிவு, ஆய்வுத் திறன் முதலானவை வளர்கின்றன. படிப்பவர்களும் எதிர்காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் ஒரு புலமைச் சொத்தாக மாறலாம்.

3. எனினும், படிப்பது வேறு; செயல்படுத்துவது வேறு. படிப் பதையெல்லாம் செயல்படுத்த முடியாது. அறிஞர்களின் கூற்றில் சரியானதும் இருக்கலாம் பிழையானதும் இருக்கலாம். அவ்வாறு படிப்பதை யெல்லாம் செயல்படுத்தத் துவங்கினால் சமூகம் அந்தப் படிப்பால் சீரழியுமே தவிர சீர்திருந்தாது. இந்த வகையில் அறிஞர்களின் கூற்றை ஆராய்ந்து நாம் வாழும் சூழல், இடம், காலம், பிரச்சினைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டே செயல்பாடு அல்லது அமுலாக்கம் என்பவற்றை நாம் முடிவு செய்ய வேண்டும். காலத்திற்கும் சூழலுக்கும் பொருந்தாத ஒன்றை நாம் செயல்படுத்த முடியாது.

4. கலந்தாலோசனையின்றி, கற்றவைகளையெல்லாம் செயற்ப டுத்துவதற்கு ஜமாஅத் விரும்புவதில்லை. இந்த ஒழுங்கை கருத்திற் கொள்ளாமல் ஒருவர் செயற்பட்டால் அவரை ஜமாஅத் நெறிப்படுத்தும் அல்லது நீக்கிவிடும்.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி மேற்கூறப்பட்ட அடிப் படையில்தான் அறிஞர்கள் விடயத்தில் நடந்து கொள் கிறது. அது மௌலானா மௌதூதியாக இருக்கலாம்;

யூஸுஃப் அல்கர்ழாவியாக இருக்கலாம்; ஏனைய அறிஞர் களாக இருக்கலாம். அவர்களை முழுமையாகப் பிரதி செய்து பின்பற்றும் நிலை ஜமாஅத்தில் இல்லை.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி மௌலானா மௌதூதி யையும் படிக்கின்றது; யூஸுஃப் அல்கர்ளாவியையும் படிக் கின்றது. அதே போன்று சூஃபி அறிஞர் இமாம் கஸ்ஸாலி, சலஃபி அறிஞர் இமாம் இப்னு தைமியா, தப்லீக் அறிஞர் மௌலானா அபுல் ஹஸன் நத்வி போன்றவர்களையும் அது படிக்கின்றது. படித்துவிட்டு இலங்கைக்கு அவசியமானவற்றை அவர்களிடமிருந்து அது தெரிவு செய்து கொள்கிறது. அவர்கள் சொன்ன அனைத்தையும் கண்களை மூடிக் கொண்டு பின்பற்றும் நிலை இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியில் இல்லை.

மௌலானா மௌதூதியுடன் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி பல இடங்களில் வேறுபடுகிறது என்பது பலருக்கு புரியாமல் இருப்பதற்குக் காரணம், ஜமாஅத்தின் இந்த நிலைப்பாடு அவர்களுக்கு தெரியாமல் இருப்பதாக இருக்கலாம்.

மௌலானா மௌதூதி பெண்கள் முகம் மூட வேண்டும் என்கிறார்; இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி முகம் திறக்க வேண்டும் என்கின்றது. மௌலானா மௌதூதி அரசியல் கட்சியாக தனது அமைப்பு பாகிஸ்தானில் செயற்படுவதை விரும்பினார்; இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி ஓர் அரசியல் கட்சியாக செயற்படுவதை என்றுமே விரும்பவில்லை.இவ் வாறு இன்னும் பல உதாரணங்களைக் கூறலாம்.

எந்த அறிஞராக இருந்தாலும் அவர்களிடம் இருந்து எதைப் பெறலாம், எதை விடலாம் என்ற தீர்மானத்தை நாம் கலந்தாலோசனையின் பின்னரே தீர்மானிக்கின்றோம்.

## கேள்வி- 27

**நீங்கள் இவ்வாறு சொன்னாலும் படிப்பதற்கு வழங்கியிருக்கும் சுதந்திரம் சிலரை தவறான வழியில் இட்டுச் செல்ல முடியுமல்லவா? பின்னர் நீங்கள் அவர்களை உங்கள் அமைப்பிலிருந்தே நீக்கிவிட்டாலும் நீங்கள் கொடுத்த சுதந்திரத்தால்தானே அவர்கள் அந்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்?**

**பதில்:** *இந்தப் பரந்து விரிந்த உலகில் எதையும் படிப்பதற்கான சுதந்திரத்தை நாங்கள் மட்டும்தானா வழங்க வேண்டும்? ஏப்ரல்-21 தற்கொலைத் தாக்குதலில் ஈடுபட்ட ஒருவருக் காவது ஜமாஅத்தே இஸ்லாமியுடன் எந்தத் தொடர்பும் இல்லை. அவர்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் ஐப் படிக்கின்ற சுதந் திரத்தை யார் வழங்கினார்கள்?*

*கடையில் இருந்து ஒரு கத்தியை வாங்கிச் சென்றவன் அக்கத் தியால் மற்றுமொருவனை கொலை செய்கின்றான். இப்போது கடை உரிமையாளரை பார்த்து நீங்கள் சொல்வீர்களா, சுதந் திரமாக கத்தியை விற்பனைக்கு வைத்திருந்தமையால்தான் அவன் கொலைகாரனாக மாறினான் என்று?*

*கொலைகாரன் கொலைகாரனாக மாறுவது, கத்தியினா லல்ல... கத்தி விற்பனையிலிருந்த சுதந்திரத்தினாலுமல்ல. தீவிரவாதி தீவிரவாதியாக மாறுவதற்கு காரணங்கள் இருக்கின்றன. குறித்த நபரின் இயல்பில் தீவிரவாத சுபாவம் அல்லது கடும்போக்கு காணப்படுகின்றமை, தீவிரத்தின் பால் அவனைத் தூண்டும் அசாதாரண சூழ்நிலைகள் அல்லது அடக்குமுறைகள், அவற்றோடு தீவிரவாத நெருப் புக்கு ஆயுதம் என்றும் பணம் என்றும் எண்ணெய் ஊற்றி அதனைக் கொழுந்து விடடெரியச் செய்யும் தீய சக்திகள்... இவை அனைத்தும் போதாதென்று இஸ்லாத்துக்கு கொச்சை யான விளக்கங்களைக் கொடுத்து காட்டுமிராண்டித்தனத்தை அரங்கேற்றும் ஐ.எஸ். ஐ. எஸ். போன்ற இரகசிய அமைப்புகள்...*

*தாக்குதல் திட்டமிடப்பட்டிருக்கிறது என்ற தகவல் கிடைத்த பின்னரும் தாக்குதலைத் தடுத்து நிறுத்தாமல் நடைபெற விட்டுப் பார்த்துக் கொண்டிருந்த மேலிடத்தவர்கள்... போன்ற வெளிப்படையான காரணிகள் நிறைந்திருந்தும் கத்தியை சுதந்திரமாக விற்றதுதான் குற்றம் என்று கூறுவது உலக அதிசயம் இல்லையா? அது போன்றதாகத்தான் மேலே தொடுக்கப்பட்ட வினாவை பார்க்கலாம்.*

*கத்தியை சுதந்திரமாக விற்பனை செய்தமைக்கு குறித்த குற்றம் தொடர்பில் ஒரு விகிதாசாரத்தை வழங்கலாம்தான். அது எத்தனை வீதமாக இருக்கும்? 0.5 வீதம்? அப்படிப்பட்ட ஒன்றை நூறு வீதமாக மாற்ற முயல்வது எத்துணை அபத்த மானது!*

## கேள்வி- 28

**உங்களது அமைப்பில் இருந்து நீக்கப்பட்டவர்கள் அல்லது தீவிரவாதத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

**பதில்:** *ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல், சமூகம் மற்றும் தேசப் பணிகளில் எங்களோடு இணைந்து கொள்பவர்கள் எங்களோடு ஒரு பொது உடன்பாட்டுக்கு வருகிறார்கள். ஜமாஅத்தின் வழிகாட்டல் தத்துவங்களில்தான் அந்த உடன்பாடு எட்டப்படு கிறது. எப்போதாவது அந்த உடன்பாட்டை ஒருவர் முறித்துக் கொண்டால் அவர் எங்களுடன் இருக்க மாட்டார். அல்லது ஜமாஅத்திலிருந்து அவர் நீக்கப்படுவார். அந்த வகையில் தான் சிலை சேதப்படுத்தல் சம்பவத்திற்குப் பல மாதங்கள் முன் பதாக ஜமாஅத்திலிருந்து ஒருவரும் குறித்த சம்பவத்திற்கு மூன்றரை வருடங்களுக்கு முன்பதாக ஜமாஅத்தின் இணை அமைப்பான இஸ்லாமிய மாணவர் அமைப்பிலிருந்து ஒரு*

*வரும் நீக்கப்பட்டனர். பின்னர் அந்த இருவரையும் ஆதரித்த ஒரு சிலரும் மாணவர் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டனர்.*

## கேள்வி- 29

**அவர்கள் எத்தகைய முரண்பாடுகளோடு வெளியேறினார்கள்? தீவிரவாதிகள் என்ற ரீதியிலா அவர்களை ஜமாஅத்தும் மாணவர் அமைப்பும் வெளியேற்றின?**

**பதில்:** *அவர்கள் இவ் அமைப்புகளில் இருந்து வெளியேறும்போது பாரதூரமான தீவிரவாத செயல்பாடுகள் எதுவும் அவர்களிடம் காணப்படவில்லை. மாறாக, தீவிரவாத சிந்தனைகள் சிலவற்றை அவர்கள் பேசினார்கள். அவை ஜமாஅத்தின் நிலைப்பாடுகள் சிலவற்றிற்கு முரணாக இருந்தன.*

*உதாரணமாக, சகவாழ்வைப் பேணவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு அவர்கள் எதிராக இருந்தனர். தேச நலனை முற்படுத்தி ஜமாஅத் முன்னெடுத்த பணிகளை பகட்டு என்று விமர்சித்தனர். இத்தகைய சிந்தனைகளைப் பேசி மாணவர் அமைப்பினுள் ஒரு முக்கிய நபர் தனக்குக் கட்டுப்படுகின்ற ஒரு குழுவை உருவாக்க முயற்சித்தார்; ஜமாஅத்தில் இருந்து விலக்கப்பட்ட ஒருவர் அதன் யாப்பை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார். இந்நிலையில்தான் அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள்.*

## கேள்வி- 30

**தீவிரவாத சிந்தனையிலிருந்து அவர்களை விடுவிக்க நீங்கள் முயற்சிக்கவில்லையா?**

**பதில்:** *தனிப்பட்ட ரீதியிலும் கூட்டாகவும் தலைமையகத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட பலர் பல்வேறு விதமாக அணுகி*

சம்பந்தப்பட்டவர்களை நெறிப்படுத்த முயன்றனர். அந்த முயற்சிகளின் பிரதிபலன் பூச்சியமாகவே இருந்தது.

## கேள்வி- 31

**இவர்களைப் பற்றி பொலிசாருக்கோ புலனாய்வுத்துறைக்கோ தகவல்கள் எதனையும் நீங்கள் வழங்கினீர்களா?**

**பதில்:** இவர்களது தீவிரவாதம் ஒரு வகை வெறுப்புப் பேச்சாகவே இருந்தது. ஜமாத்தின் நடைமுறைகளுக்கு அது ஒவ்வாமையாக இருந்ததாலும் அந்தப் பாணியிலான ஒரு பேச்சுக் கலாசாரம் ஜமாஅத்திலோ அல்லது மாணவர் அமைப்பிலோ வளர்ந்து விடக்கூடாது என்ற கரிசனையாலும் அவர்கள் குறித்த அமைப்புகளில் இருந்து நீக்கப்பட்டனர்.

நாட்டில் அப்போது வெறுப்புப் பேச்சு கலாசாரம் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தது. இவர்களும் அங்கிருந்துதான் கற்றார்களா என்பது எங்களுக்கு தெரியாது. இவர்களைவிட பன்மடங்கு வன்மையானதாக நாட்டில் வெறுப்புப் பேச்சு கலாசாரம் வளர்ந்திருந்தது. எனினும், அரசாங்கம் அதற்கு எதிராக ஒன்றும் செய்திருக்கவில்லை; பொலிஸாரும் புலனாய் வுப் பிரிவினரும் ஒருவரையும் கைது செய்ததாகத் தெரிய வில்லை. இனவாத, தீவிரவாத வெறுப்புப் பேச்சுகளுக்கு கைதுகள் அல்லது விசாரணைகள் உண்டா என்பதும் அப் போது தெரிந்திருக்கவில்லை. எனவே, சட்டரீதியாக நட வடிக்கை எடுக்கப்படாமல் விட்டுவைக்கப் பட்டிருந்த ஒரு செயல் தொடர்பில் யார் யாரிடம் முறையிடுவது?

எனினும், ஜமாஅத்தும் மாணவர் அமைப்பும் குறித்த நபர்களை வெளியேற்றியது தொடர்பில் தமது உறுப்பினர்களுக்கு

தெரியப்படுத்தின. அதனால் அந்த விடயம் புலனாய்வுத் துறைக்கு நிச்சயம் தெரிய வந்திருக்கும் என்று நினைக்கி றோம். அதற்குப் பிறகு நடந்தவை பற்றி எங்களை விட அதிகம் அறிந்தவர்களாக அவர்களே இருந்திருப்பார்கள்.

## கேள்வி- 32

**இந்தக் கேள்வியை எவ்வாறு பார்க்கிறீர்கள்? சிலர் இப்படியும் கேட்கலாம் என்று நினைக்கிறேன். அதாவது, "நீங்கள் ஏன் வழிகாட்டல் தத்துவங்களையெல்லாம் வைத்துக் கொண்டு மற்றவர்களை வழிநடத்த வேண்டும்? ஒவ்வொருவரும் அவரவர் நினைத்த விதமாக வாழ்ந்து விட்டுப் போனால் என்ன; உங்களுக்கேன் இந்த சிரமம்?"**

**பதில்:** கூட்டாக செயல்படுகின்ற அனைவரிடமும் கேட்கப்பட வேண்டிய கேள்வி இது.

- ❖ மனிதன் ஒரு சமூகப் பிராணி.
- ❖ சமூகமாக ஒன்றிணைந்து செயல்படுவது **(Teamwork)** மனி தனது உரிமையும் சுதந்திரமும் தேவையுமாகக் கருதப் படுகிறது.
- ❖ ஜனநாயக நாடொன்றில் அந்நாட்டின் சிறப்பம்சங்களுள் ஒன்றாகவும் அது கொள்ளப்படுகின்றது.
- ❖ நாடுகளினதும் சமூகங்களினதும் மேம்பாடுகளில் கூட்டு முயற்சிகள் பங்காற்றுகின்றன.

இவ்வாறு பல கோணங்களில் உலகம் ஊக்குவிக்கின்ற தொரு செயல்பாடாக அது காணப்படுகின்றது.

ஒரு கூட்டு முயற்சி அவசியமற்றது... அல்லது வீணானது என்று தீர்மானிப்பதாயின் அதனை யார் வழிநடத்துகிறார் கள்...? எப்படி வழிநடத்துகிறார்கள்? அதனை வழி நடத்தும்

*கோட்பாடுகள் எப்படிப்பட்டவை? அதன் விளைவுகள் சாதகமாக இருக்கின்றனவா? என்பது போன்ற வினாக்களுக்கு விடை தேடிய பிறகே அத்தகையதொரு முடிவு பெறப்படல் வேண்டும்.*

*அதுமட்டுமல்ல, ஒரு கூட்டு முயற்சியின் விளைவுகள் நூறு வீதம் சரியாக இருக்க வேண்டும் என்பதும் சாத்தியமில்லை.*

*ஒரு வகுப்பில் இரண்டு அல்லது மூன்று மாணவர்கள் சித்தியடையவில்லை. ஒரு வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நூற்றுக்கணக்கானவர்களில் வாரம்தோறும் ஒருவர் அல்லது இருவர் மரணித்து விடுகின்றனர் என்று வைத்துக் கொள்ளுங்கள்.*

*இது போன்ற விளைவுகள் காரணமாக வைத்தியசாலை யையோ அல்லது பாடசாலையையோ மூடி விடுவதில்லை.*

*அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்டதொரு கூட்டு முயற்சியின் விளைவாக நாட்டுக்கும் சமூகத்துக்கும் நல்ல பிரஜைகளாக மாறும் ஆயிரங்களுக்கு மத்தியில் விரல்விட்டு எண்ணத்தக்க சிலர் நெறி பிறழ்ந்து செல்வதும் அவ்வாறுதான் பார்க்கப்பட வேண்டும்.*

*உங்களுக்கேன் இந்த சிரமம் என்று கேட்பது கேள்வி அல்ல.*

## கேள்வி- 33

**நீங்கள் சமாதானப் பறவையாகத்தான் உங்களை காட்சிப்படுத்துகிறீர்கள். எனினும், நீங்கள் தந்திரமானவர்கள் என்று ஒருவர் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வீர்கள்?**

**பதில்:** *தந்திரமுள்ள நரி எவ்வளவு காலம் புறாவாக நடிக்கலாம்? ஒரு நாள் தந்திரம் வெளிவரத்தானே செய்யும்? 65 வருடங்கள்*

*இந்த நாட்டில் செயற்பட்டிருக்கிறோம். வெளிவந்த தந்திரங்கள் இருந்தால் யாராவது சொல்லலாமல்லவா? பலர் இப்போது வயதாகிவிட்டார்கள். எஞ்சிய காலத்திலாவது தந்திரத்தால் அவர்கள் பயனடைவதில்லையா? அல்லது தொடர்ந்தும் தந்திரமாக நடித்துக் கொண்டே இருப்பதா? அல்லது இதுவரை நடித்ததன் மூலம் தேடிக் கொண்ட சௌபாக்கியங்களையாவது சம்பந்தப்பட்டவர்கள் கண்டுபிடிக்கலாமல்லவா?*

## கேள்வி- 34

**களத்தில் நீங்கள் செய்கின்ற வேலைகள் என்ன? எத்தகைய அடைவுகளை இலக்குகளாக நீங்கள் கொண்டிருக்கிறீர்கள்?**

**பதில்:** *உங்களது கனவு நனவாகினால் இலங்கை எப்படி இருக்கும் என்றொரு கேள்வி கேட்டிருந்தீர்கள், நினைவிருக்கிறதா? அந்தக் கேள்விக்கான பதிலில் எமது கனவு, இலக்கு அல்லது அடைவு பற்றி நாம் சொல்லி விட்டோம் என்று நினைக்கிறேன். அதற்காக மேற்கொள்ளும் பணிகளை இங்கு குறிப்பிடுகின்றேன். (11 ஆவது வினாவுக்கான பதிலைப் பார்க்கவும்)*

**i.** *அறிவைப் பரப்புதல்:*

*இஸ்லாம் தொடர்பான அறிவு, இன்றைய உலகம் தொடர்பான அறிவு என்ற வேறுபாடில்லாமல் அறிவை மேம்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கி முடியுமானவரை அறிவூட்டுகின்ற வேலைகளைச் செய்தல்.*

**ii.** *சமூக சீர்திருத்தம்:*

*தனிப்பட்ட, குடும்ப, சமூக, வியாபார வாழ்க்கையிலும் மற்றும் இன்னோரன்ன துறைகளிலும் இஸ்லாத்தின்*

போதனைகளை செயல்படுத்துவதற்கான வழிகாட்டல்களை இலங்கைக்குப் பொருத்தமான வகையில் வழங்குதல்.

**iii.** சமூக மேம்பாடு:

சமூகத்தின் அடிமட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சமூக நலத் திட்டங்களை முன்னெடுத்தல்.

**iv.** தேச மேம்பாடு:

நாட்டு மக்களோடு இணைந்து நாட்டின் நல்லதோர் எதிர் காலத்திற்காக செயல்படுதல். இந்த வகையில் ஐந்து அம்சங் களை ஜமாஅத் அடையாளப்படுத்தியிருக்கிறது. அந்த அம்சங்களில்தான் தற்போதைக்கு ஜமாஅத் சகோதர சமூகங்களோடு இணைந்து செயல்படுகிறது.

அ. மனித நலனை மேம்படுத்தல்.

ஆ. இயற்கை வளங்களைப் பாதுகாத்து மேம்படுத்தல்.

இ. நல்லாட்சிக்காக பணிபுரிவோருடன் இணைந்து செயல்படல்.

ஈ. நாம் இலங்கையர் என்ற மகுடத்தின் கீழ் இலங்கையர்கள் நல்லதொரு சிவில் சமூகமாக மாறுவதற்கு உதவுதல்.

எ. விழுமிய ஊடகக் கலாசாரம் ஒன்றின் வளர்ச்சிக்கான பங்களிப்புகளை செய்தல்.

## கேள்வி- 35

**உங்களது பணிகளால் பயனடைபவர்கள் யார், முஸ்லிம்கள் மட்டுமா?**

**பதில்:** நாம் சுட்டிக்காட்டிய பணிகளில் சமூக சீர்திருத்தம் என்ற பணியே நூறு வீதம் முஸ்லிம்களை இலக்காகக் கொண்டது.

*காரணம், இஸ்லாத்தின் போதனைகளை முன்வைத்து சமூக சீர்திருத்தம் செய்வதால் நாம் முஸ்லிம்களைத்தான் இலக்காகக் கொள்ள முடியும். இல்லாவிட்டால் அது பிரச்சினையைத் தோற்றுவிக்கும். அது தவிர, ஏனைய நான்கு பணிகளும் பொதுவானவை; எல்லோருக்குமானவை. அந்தப் பணிகளால் அனைவரும் பயனடைகிறார்கள்.*

## கேள்வி- 36

**இந்தப் பணிகளை யார் செய்கிறார்கள், ஜமாஅத் அங்கத்தவர்கள் மட்டுமா? எப்படிச் செய்கிறார்கள்?**

**பதில்:** *நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி தன்னுடன் இணைந்து செயல்படுபவர்களுக்கான வழிகாட்டல் தத்துவங்களை வழங்கியிருக்கின்றது. செய்யப்பட வேண்டிய வேலைகளையும் அடையாளப் படுத்தி இருக்கின்றது.*

*இப்போது அவர்கள் அப்பணிகளை பலவாறாக முன்னெடுக்கலாம்- அவர்களிடமிருக்கின்ற வளங்களைப் பொறுத்து... உதாரணமாக,*

1. *ஜமாஅத்தின் பெயரில் முன்னெடுக்கும் பணிகள்.*
2. *ஜமாஅத்தின் அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சிலர் ஒன்றிணைந்து சுயமாக முன்னெடுக்கும் பணிகள்.*
3. *ஜமாஅத்தின் அங்கத்தவர்களில் ஒருவர் அல்லது ஒரு சிலர், சமூகம் முன்னெடுக்கும் பணி ஒன்றில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தமது பங்களிப்பை முழுமையாகவோ அல்லது அதிகமாகவோ குறித்த பணிக்கு வழங்குதல்.*

*இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால், சமூகத்தில் பலர் இரண்டாம் மூன்றாம் வகை பணிகளையும் ஜமாஅத்தின்*

பணிகளாகப் பார்க்கிறார்கள். சிலபோது ஜமாஅத்தின் அங்கத் தவர்கள் கூட ஒரு பிளஷர் இற்காக இவற்றை ஜமாஅத்தின் பணிகள் என்று பேசி விடுகிறார்கள். உண்மை அதுவல்ல.

இத்தகைய பணிகளை முன்னெடுக்கும்போது பின்பற்றப் படும் நடைமுறைகளை அவதானித்தால் அதனைப் புரிந்து கொள்ள முடியும்.

ஜமாஅத்தின் அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சிலர் ஒன்றிணைந்து சுயமாக ஒரு நிறுவனத்தையோ அல்லது ஒரு சேவையையோ செய்ய விரும்பினால் அவர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

1. குறிப்பிட்ட பணியை முன்னெடுப்பதற்கான... நிர்வகிப்பதற் கான... மேம்படுத்துவதற்கான குழுவை அல்லது குழுக்களை அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

2. அப்பணியோடு சம்பந்தப்பட்ட அனைத்து விவகாரங் களுக்கும் அவர்களே பொறுப்பாக இருக்க வேண்டும்.

3. குறிப்பாக, அப்பணியைத் தொடர்வதற்கான நிதியையும் அவர்களே திரட்டிக் கொள்ள வேண்டும்.

4. உதவிகள் மற்றும் நிபுணத்துவ ஆலோசனைகளை அவர்கள் யாரிடமிருந்தும் பெறலாம். ஜமாஅத்தையும் அந்த நோக்கில் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

5. இத்தகைய பணிகளுக்கு அவசியமான செலவுகளை ஜமா அத்தின் தலைமையகம் பொறுப்பேற்க மாட்டாது என் பதை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் (ஜமாஅத்தின் நிதி என்பது இந்த வகையில் ஜமாஅத்தின் தலைமையக செலவுகளுக்கான நிதியையே குறிக்கும். அந்த நிதி நடை முறையை யாப்பின் நிதி நியமங்களுக்கு ஏற்ப ஜமாஅத் மேற்கொள்ளும்)

## கேள்வி- 37

### சமூகத்தின் அடிமட்டத்தில் உங்களது வேலைகளை எவ்வாறு ஒழுங்குபடுத்தியுள்ளீர்கள்?

**பதில்:** *பிராந்தியம் ஒவ்வொன்றுக்கும் ஒரு குழு இருக்கும். அந்தக் குழு தனக்குக் கீழ் இருக்கும் கிளைகள் மற்றும் பயிற்சி மன்றங்கள் என்பவற்றின் செயல்பாடுகளைக் கவனிக்கும். அவற்றில் பெண்களும் வேலை செய்வார்கள். ஓரளவு வளர்ந்த அலகுகளை கிளைகள் என்றும் சிறிய அலகுகளை பயிற்சி மன்றங்கள் என்றும் குறிப்பிடுவோம். கிளைகள் மொத்தம் 13 இருக்கின்றன பயிற்சி மன்றங்கள் 72 இருக்கின்றன.*

## கேள்வி- 38

### மாணவர் அமைப்பு ஒன்று உங்களது இயக்கத்தில் இருக்கின்றதுவா? அது பற்றி விளக்குவீர்களா?

**பதில்:** *1980ஆம் ஆண்டிற்கு முன்பு மாணவர்கள், மூத்தவர்கள் என்ற வேறுபாடில்லாமல் அனைவரும் ஓர் அமைப்பாகவே இருந்தார்கள். எண்பதுகளில் ஒரு சில மாணவர்கள் தனியாக இயங்குவதற்கான ஏற்பாட்டை தமக்கு செய்து தருமாறு கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர். முதலில் அதனை விரும்பாத ஜமாஅத், பின்னர் அந்தக் கோரிக்கைக்கு இணங்க முன்வந்தது. அதாவது, சுயமாக இயங்குவதற்கான நிபந்தனைகளை ஏற்பதோடு மாணவர் அமைப்பின் செயல்பாடுகளுக்கான முன்மொழிவை முன்வைக்குமாறு அவர்கள் வேண்டப்பட்டனர்.*

*தலைவர், மத்திய சபை, அங்கத்தவர் நடைமுறைகள், தெரிவு முறைகள் என ஓர் அமைப்பு வேண்டிநிற்கும் சகல அம்சங்களையும் உள்ளடக்கிய யாப்பு ஏற்பாடுகளைப்*

பூர்த்தி செய்தவுடன் ஓர் இணை **(affiliated)** அமைப்பாக செயல் படுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இணை அமைப்பு என்பது ஒத்த நோக்கங்களை உடைய, அதேநேரம் சுயமாக இயங்கக் கூடிய... **Affiliation** ஐயும் பெற்ற தோர் அமைப்பாகும்.

ஜமாஅத்தின் யாப்பின்படி இத்தகைய அமைப்புகளுக்கு அவசியமேற்படும்போது முடியுமான உதவிகள் மற்றும் ஆலோசனைகளை ஜமாஅத் வழங்கும். எனினும், அவ்வமைப்பு களின் செயற்பாடுகளுக்கு ஜமாஅத் பொறுப்பாக இருக்க மாட்டாது.

## கேள்வி- 39

**இளைஞர்களான மாணவர்களை சுதந்திரமாக விட்டு வைப்பது சரியா? அனுபவங்கள் குறைந்த நிலையில் அவர்கள் திசை மாறிச் செல்ல மாட்டார்களா?**

**பதில்:** மாணவர் அமைப்புக்கென்று கட்டுப்பாடுகள் இருக்கவே செய்கின்றன.

யாப்பு நடைமுறை இருக்கின்றது. நிலைப்பாடுகள் இருக் கின்றன. எவ்வாறான தளங்களில் வேலை செய்ய வேண்டும் என்ற வரையறைகள் இருக்கின்றன. எனவே அமைப்பை ஒரு சிலர் தாம் நினைத்தவிதமாக வழிநடத்த முடியாது. அவ்வாறு வழிநடத்த முயன்றால் அவர்கள் அமைப்பை விட்டு வெளியேறவேண்டி வரும். அல்லது வெளியேற்றப் படுவார்கள்.

இத்தகைய வரையறைகளோடு சுதந்திரமாக செயல்படு வதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அப்போதுதான்

இளைஞர்கள் தமது பிரச்சினைகளைத் தாமே கையாளும் திறனுள்ளவர்களாக இருப்பார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து கிராமங்களின் அடிமட்டம் வரை இளைஞர் பிரச்சினை பேசப்படுகிறது. இளைஞர்கள் ஆக்கபூர்வமான பங்களிப்புகளை வழங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்ற விடயம் வலியுறுத்தப்படுகிறது. அவர்களது ஆற்றல்கள், திறமைகள் அதற்காக விருத்தி செய்யப்பட வேண்டிய அவசியமும் இருக்கின்றது. அது உலகம் ஏற்றுக்கொண்ட மரபாகவும் இருக்கிறது.

இந்த வகையில் சுமார் 40 வருடங்கள் மேடு பள்ளங்களைத் தாண்டி சுதந்திரமாகவும் நெறிமுறைகளோடும் சீராக செயற்படுகின்ற ஓர் அமைப்பு என்றே இஸ்லாமிய மாணவர் அமைப்பைக் கூற வேண்டும்.

## கேள்வி- 40

**இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சுக்கள் மற்றும் வன்முறைகள் அதிகரித்து வருகின்ற நிலையில், இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான திட்டங்கள் எதுவும் ஜமாஅத்தில் இருக்கின்றனவா?**

**பதில்:** இது உண்மையில் இலங்கையின் பிரச்சினையாகும். வெறுப்புப் பேச்சுக்களால் பிரச்சினை தீருமா, வளருமா என்பதை இலங்கை நலனில் அக்கறை கொண்டவர்கள் சிந்திக்க வேண்டும். இலங்கையின் எதிர்காலம், அதற்கான திட்டங்கள், முன்னெடுப்புக்கள் என்பவற்றைக் கிடப்பில் போட்டுவிட்டு தலைவர்கள்

முதல் சாதாரண மக்கள் வரை வெறுப்புப் பேச்சுக்களில் குளிர் காய்ந்து கொண்டிருப்பது நாட்டுக்கு எவ்வாறு நன்மையைப் பெற்றுத் தரும்? வெறுப்புப் பேச்சுக்கள், அவற்றைத் தொடர்ந்து ஆங்காங்கே அரங்கேற்றப்படும் வன்முறைகள் என்பவற்றால் உடனடிப் பாதிப்பு சிறுபான்மை சமூகம் ஒன்றுக்கு ஏற்பட்டாலும் நீண்ட காலத்தில் இந்தப் பிரச்சினையால் பாதிக்கப் படப்போவது முழு தேசமுமே.

இத்தகையதொரு பிரச்சினையை ஒரு சிறிய அமைப்பால் தீர்த்துவிட முடியாது. அனைவரும் ஒன்றிணைந்தே இந்தப் பிரச்சினையை அலசி ஆராய்ந்து தீர்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல, இந்த நாட்டு மக்கள் ஓர் அரசாங்கத்தைத் தெரிவு செய்திருப்பது நாட்டு மக்கள் அனைவரது பாதுகாப்பையும் உரிமைகளையும் உத்தரவாதப்படுத்தி நாட்டில் அமைதியையும் சுபிட்சத்தையும் மலரச் செய்வதற்கே. அந்த வகையில், நாட்டின் பிரச்சினைகள் எதுவானாலும் வகை கூற வேண்டியது அரசாங்கமே. எனினும், இன்று அந்த நிலையைக் காண முடியாதிருக்கிறது. முஸ்லிம்களைப் பொறுத்தவரை, அரசாங்கம் இல்லாத நாடொன்றில் வாழ்வது போன்ற உணர்வையே அவர்கள் அனுபவிக்கிறார்கள். அங்கு பலசாலிகள் எதைவேண்டுமானாலும் செய்யலாமல்லவா?

மீடியாக்கள் பச்சையாக இனவாதம் கக்குகின்றன. மீடியா துறையினரின் கைகளில் இருக்கின்ற கமராக்கள் குற்றமற்ற அப்பாவி மக்களின் மானத்தை ஷூட்டிங் செய்து கொலை செய்து விடுகின்றன. பொய்களையும் அவதூறுகளையும் பரப்பி ஒரு மனிதனின் தன்மானத்தைக் கொலை செய்வதை விட அவனது உயிரைக் கொலைசெய்வது மேலானது என்று முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் ஒரு முறை கூறியது நினைவுக்கு வருகிறது.

## கேள்வி- 41

**வெளிநாட்டுத் தொடர்பும் பயங்கரவாதத்தோடு இணைத்துப் பார்க்கப்படுகிறது. உங்களது வெளிநாட்டுத் தொடர்புகள் எந்த அளவுக்கு இருக்கின்றன? எவ்வாறானதொரு வெளியுறவை நீங்கள் பேணி வருகின்றீர்கள்?**

**பதில்:** *ஜமாஅத் ஆரம்ப காலம் முதலே தனது வெளிநாட்டுத் தொடர்புகளில் தெளிவான நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தது. இன்று வரை அந்த நிலைப்பாடுகளில் எந்த மாற்றமும் இல்லை. இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி இலங்கைக்கான ஓர் அமைப்பாக எவ்வாறு செயல்படுகின்றது என்ற விடயத்தை விளக்கும்போது இது பற்றிக் கூறியிருக்கிறோம்.*

*ஜமாத்தே இஸ்லாமி என்ற பெயரிலோ அல்லது வேறு பெயர்களிலோ உலகின் எப்பாகத்தில் இயங்கும் எந்தவோர் அமைப்புடனும் கட்டுப்பாடுடன் கூடிய உத்தியோகபூர்வ உறவை ஜமாஅத் கொண்டிருக்கவில்லை; இனியும் கொண்டிருக்காது என்பது ஜமாஅத்தின் நிலைப்பாடுகளில் ஒன்றாகும்.*

*இது தவிர முஸ்லிம் உலகின் அரச ஸ்தாபனங்களோ அல்லது அரசாங்கங்களால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் அமைப்புகளோ நடத்துகின்ற சர்வதேச மாநாடுகளில் கலந்து கொள்வதற்கான அழைப்புகள் அவ்வப்போது ஜமாஅத்திற்கு கிடைக்கின்றன. அத்தகைய மாநாடுகளில் ஜமாஅத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருக்கிறார்கள். இது போன்ற உறவுகள் அந்தந்த மாநாடுகளோடு முடிவுறுபவைகளாகவே இருந்திருக்கின்றன.*

## கேள்வி- 42

**உங்களது பணிகளில் உங்களோடு ஒத்துழைப்பதற்கு அல்லது நேரடியான பிரசாரப் பணிகளில் ஈடுபடுவதற்கு வெளிநாட்டுப் பிரசாரகர்கள் வருகைதரும் வழக்கம் உண்டா?**

**பதில்:** *65 வருடங்களாக ஜமாஅத் இலங்கையில் செயல்படுகின்றது. இக்காலப் பகுதியில் விரல்விட்டு எண்ணத்தக்க சிலரே அவ் வாறு வந்து சென்றிருக்கிறார்கள். அவர்களது எண்ணிக்கை அதிகபட்சம் பத்தை தாண்ட மாட்டாது.*

*இது தவிர, ஜமாஅத்தின் சம்பிரதாயபூர்வமான வருடாந்த கூட்டங்களில் சிலர் அவ்வப்போது அதிதிகளாக கலந்து சிறப்பித்து இருக்கின்றார்கள். அதன்போது பத்து அல்லது பதினைந்து நிமிட சம்பிரதாய உரைகளை அவர்கள் நிகழ்த்தி இருப்பார்கள்.*

## கேள்வி- 43

**ஜமாஅத்தின் சிறப்பம்சங்கள் என செவிமடுப்போர் கருதுமளவு ஈண்டு குறிப்பிடத்தக்க அம்சங்கள் ஏதேனும் உண்டா?**

**பதில்:** *நாம் இதுவரை விளக்கிய விடயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரைக் கவர்ந்திருக்கலாம். எனினும், செய்யாத இரண்டு வேலைகள் இருக்கின்றன. அவற்றை இவ்விடத்தில் குறிப்பிடலாம் என்று கருதுகின்றோம்.*

*அ) ஜமாஅத்தே இஸ்லாமி தனது சிந்தனைகளையும் செயல் பாடுகளையும் முன்னெடுப்பதற்காக தனக்கென்று மஸ்ஜிது களைக் கட்டிக் கொள்ளவில்லை. இருக்கின்ற மஸ்ஜிதுகளில் அனுமதி பெற்றே தனது நிகழ்ச்சிகளை அது செய்து வரு கின்றது. அனுமதி மறுக்கப்படும் இடங்களில் ஊரின் குறித்த மஸ்ஜித்களிலிருந்து விலகிச் செல்லவோ அல்லது குறித்த மஸ்ஜித் நிர்வாகிகளுடன் மோதல்களை ஏற்படுத்திக் கொள்ளவோ ஜமாஅத் விரும்புவதில்லை. மாறாக, ஊரின் அனைத்து விவகாரங்களிலும் கலந்துகொண்டு இணக்கமான ஒரு சூழலை உருவாக்கவே ஜமாஅத் விரும்புகின்றது. இதன்*

விளைவாக அனுமதி மறுத்த இடங்கள், அரவணைக்கும் இடங்களாகவும் தப்பெண்ணங்களோடு இருந்த இடங்கள் புரிந்துணர்வைப் பெற்ற இடங்களாகவும் மாறி இருக்கின்றன.

பிறர் நலன்களில் தூய்மையான கரிசனை மற்றும் தனியாக 'கோல்' போட முயற்சிக்காமல் டீமோடு சேர்ந்து விளையாடும் பண்பு என்பவற்றுக்குக் கிடைத்த வெற்றியாக ஜமாஅத் இதனைக் கருதுகின்றது.

ஆ) அடுத்த அம்சம், கட்சி அரசியலில் நேர்முகமாகவோ, மறை முகமாகவோ ஈடுபடுவதில்லை என்பது ஜமாஅத்தின் தீர்மான மாகும்.

இந்த நாட்டின் அதிகமான விவகாரங்கள் இனங்களை அடிப் படையாக வைத்து முன்னெடுக்கப்படுகின்ற ஒரு சூழல் உருவாகியிருக்கின்றது. சிங்கள அரசியல், முஸ்லிம் அரசியல், தமிழ் அரசியல் என அரசியல் துண்டாடப்பட்டு இருக்கிறது. சிங்களப் பாடசாலை, முஸ்லிம் பாடசாலை, தமிழ் பாடசாலை என கல்வி பிரிக்கப்பட்டிருக்கிறது.

இஸ்லாத்தின் போதனைகளை முன்னிறுத்தி செயல்படு கின்றதோர் அமைப்பு இந்தப் புறநடை சூழலை மாற்ற வேண்டும் அல்லது குறைந்தபட்சம் அதற்குப் பலம் சேர்க்கா மலாவது இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே கட்சி அரசியலை வழிமுறையாகக் கையாளும் தீர்மானத்தை ஜமாஅத் தவிர்த்துக் கொண்டது.

அதற்கு மாற்றமாக, தேச நலனை முன்னிறுத்தி அரசியல் செய்கின்ற அனைவரோடும், அவர்கள் எந்தக் கட்சியாக இருந் தாலும் ஒத்துழைப்பது என்ற முடிவை ஜமாஅத் எடுத்தது. இன்று அதனையே ஜமாஅத் செய்து கொண்டிருக்கின்றது. இவ்விரண்டு தீர்மானங்களையும் இங்கு குறிப்பிடுவதற்கான காரணங்கள்.

முதல் நிலைப்பாடு சமூக நலனையும்....

இரண்டாவது நிலைப்பாடு தேச நலனையும் முன்நிறுத்தி மேற்கொள்ளப்பட்டவை என்பதுதான்.

ஜமாஅத் இந்த நிலைப்பாடுகளால் நீண்ட காலம் பணி புரிந்தும்கூட எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியை அடைய வில்லை என்ற குற்றச்சாட்டு ஜமாஅத்தின் பல உறுப்பினர் களிடையே இன்னுமிருக்கிறது.

எனினும், ஜமாஅத் வளர்ச்சியடைந்து சமூகமும் தேசமும் பாதிப்புக்குள்ளாகுவதை ஜமாஅத் விரும்பவில்லை.

நல்லதொரு தேசத்தையும் நல்லதொரு சமூகத்தையும் கனவு காணும் ஜமாஅத், அதற்குப் பாதகமாக நிலைப்பாடொன்றை எங்கனம் எடுக்க முடியும்?

வெளியீடு:

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு - 09

தொலைபேசி: 0112687091

பெக்ஸ்: 0112686030

E-Mail: secretariatslji@gmail.com